Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி என் 49

மலர் ൦ யாழ்ப்பாணம் சுபகிருது மாசி 15 ஆம் நாள் ஷவ்வால் 2 (27-2-63) புதன்கிழமை இதழ் 19

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்


அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணாடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழ்ப்பாணம்

# மேயர் ராஜினமா இல்லை நள்ளிரவு தீர்மானம்

## ஏப்ரல்வரை பதவியில் இருக்க தர்மலிங்கம் முடிவு

யாழ்ப்பாணம், புதன்

டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் மேயர் பதவியை வகித்து வருவார். நேற்று முன்தினம் நள்ளிரவுவரை நடைபெற்ற மகாநாட்டில் இந்த முடிவு செய்யப்பட்டது. மேயர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்வதாக டாகடர் தர்மலிங்கம் எழுதிக்கொடுத்த கடிதத்தை மேலிடத்தில் சமர்ப்பிப்பதில்லை யென்றும் அதை ரத்துச் செய்து விடுவதென்றும் அந்த மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மேயர் டாக்டர் எஸ். ஏ தர்மலிங்கம், மேயர் பதவி சம்பந்தமாக எதுவிதமான கனவான்கள் ஒப்பந்தமும் செய்யவில்லை எனறு தெரிவித்துள்ளார். தானே தமிழரசுக்கட்சி எம். எம். சிக்களோ மேயர் பதவி விஷயமாக எந்தவிதமான ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை என்று தெரிவித்த மேயர் தமதுராஜினமா கடிதம் ஒரு சிலரின் விருப்பத்திற்காகவே எழுதப்பட்டது என்றும் தெரிவித்தார்.

இதேசமயம் உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டிருப்பதுவும் அத்தீர்மானம் ஐந்தாந்திகதி விவாதிக்கப்படவிருப்பதும் மேயர் பதவியை டாக்டர் தர்மலிங்கம் இப்பொழுது ராஜினமாச் செய்வதனல் புதியதொரு சூழ்நிலையை ஏற்படுத்துமென மாநகரசபையின் பெரும்பான்மையினர்க் கோஷ்டியினர் கருதுவதாகத் தெரிகிறது.

திரு. துரைராஜசிங்கத்தின் மீது கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதேசமயம் டாக்டர் தர்மலிங்கத்தின் ராஜினமாவினல் மேயர் பதவியும் காலியாகவிருந்தால் சபையைக் கலைப்பதற்குச் சிலர் முயற்சி செய்ய இடம்வைக்கக் கூடுமென்றும் அவர்கள் கருதினர்.

இதைத் தொடர்ந்து மேயர் பதவியை டாக்டர் தர்மலிங்கம் இப்பொழுது ராஜினமாச் செய்யக்கூடாதென்றும் ராஜினமாவை ஏப்ரல் மாதம் முதல் திகதி வரை ஒத்திவைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

ஐந்துசந்திக்கருகில்:

# அண்ணன் மரணம்; தங்கை ஆஸ்பத்திரியில்

## லொறியினல் மோதப்பட்ட பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ஐந்துசந்திக்கு அருகாமையில் நேற்று ஆறரைமணியளவில் 12 வயது சிறுவன் ஒருவனும், 5 வயதுச் சிறுமி ஒருத்தியும் லொறிஒன்றினல் மோதுப்பட்டதால் சிறுவன் ஸ்தலத்திலேயே மரணமானன், சிறுமி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள்.

சில்லறை வியாபாரி திரு. முகமத் சுல்தான் என்பவரின் இரு பிள்ளைகளுமே இப்பரிதாப சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள். கார் ஒன்றுடன் மோதுவதைத் தவிர்க்கும் பொருட்டு லொறிச் சாரதி லொறியை ஒரு பக்கமாகச் செலுத்த முயன்றபோதே வீதியில் நின்ற இரு பிள்ளைகளும் மோதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. லொறி மோதியவுடனேயே 12 வயதுச் சிறுவன் லபீர் ஸ்தலத்திலேயே மரணமானன். 5 வயதுச் சிறுமியான பைசா யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டாள்சிறுமியின் நிலை அபாயகரமற்றதென ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சல்லிக்கல்லு ஏற்றிக்கொண்டுவந்த புன்னலைக்கட்டுவனைச் சேர்ந்தமார்க்கண்டுவின்லொறிச்சாரதி ஓடிமறைந்துவிட்டார். இது பற்றிப் பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

# மல்லாகம் பஸ்டிப்போ மீண்டும் திறக்கப்படலாம்

யாழ்ப்பாணம், புதன்

வடமாகாணத்தின் பஸ் சேவை அடுத்த மாதத்திலிருந்து ஒழுங்காக நடைபெறவிருப்பதாக அறியப்படுகிறது. விரைவில் மல்லாகம் டிப்போவைத் திறந்து வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

வடமாகாணத்திற்கு அடுத்த மாதத்தில் சுமார் 30 பஸ்கள் அனுப்பிவைக்கப்படவிருப்பதாகவும், அவை வடமாகாணத்தின்பலபாகங்களுக்கும் சேவைக்கு அனுப்பிவைக்கப்பட விருப்பதாகவும் தெரிகிறது.

தினமும் பிரயாணிகள் பஸ் சேவை சீர்கேட்டினல் கஷ்டப்படுகின்றனர். பஸ் சேவை தேசீய மயமாக்கப்பட்ட பின்னர் பஸ்சேவைநாகளுக்கு நாள் மோசமடைந்து வந்துள்ளது. பஸ் சேவையை திருத்தியமைக்க இலங்கை போக்குவரத்துச் சபை முயற்சிகள் எடுத்து வருவதாகதெரிகிறது.

இம்மாதம் முற்பகுதியில் மூடப்பட்ட மல்லாகம் டிப்போ மீண்டும் திறந்துவைக்கப்படவேண்டுமென பொதுமக்களும், பொது ஸ்தாபனங்களும் வலியுறுத்தி வந்ததனைத் தொடர்ந்து அடுத்த மாதத்தில் மல்லாகம் டிப்போ திறந்துவைக்கப்படலாம் என்று தெரிகிறது.

## 6 வயது குழந்தை லொறி மோதி மரணம்

மாவிட்டபுரம், செவ்வாய்

அச்சுவேலி தொண்டமனறு ரோட்டில் தனது வீட்டுக்கு முன்னல் நின்ற ஆறு வயதுள்ள செல்வி நாகமணி சுகுண என்னும் சிறுமியை லொறி மோதியது. சிறுமி ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளார். லொறிச் சாரதி வண்டியை நிற்பாட்டாமல் ஓடிவிட்டார். அவ்விபத்து சம்பந்தமாக 'புஷ்பராணி விமானம்' என்னும் லொறியையும் அதன் சாரதியான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கந்தவனம் அல்லது பொன்னம்பலம் என்பவரையும் பொலிசார் தேடுகின்றனர். இது சம்பந்தமாக காங்கேசன் துறை பொலிஸ் நிலைய உதவி இன்ஸ்பெக்டர் விசாரணை நடத்தி வருகிருர்.

—

## இன்று

கொழும்பு, புதன்

இன்று காலை 10-45 க்கு இராணுவ சதிவழக்கு மீண்டும் ஆரம்பமாகும்.

# அரசாங்கத்தின் கொள்கை தெளிவாகவேண்டும்

## அதன்பின்னரே தேசியப் பிரச்னைபற்றிப் பேச்சு

### திரு. ராசமாணிக்கம் கருத்து

யாழ்ப்பாணம், புதன்

தேசியப் பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வு காணுமுகமாகப் பேச்சுவார்த்தை நடத்த தமிழரசுக்கட்சியை பிரதமர் சிறிமா அழைத்தால் அரசாங்கத்தின் கொள்கையென்னவென்பதைத் திட்டவட்டமாக அறிந்த பின்னரே பேச்சுவார்த்தைக்கு தமிழரசுக்கட்சி ஒப்புக்கொள்ளும் என்று கட்சியின் தலைவர் திரு. எஸ் எம். இராசமாணிக்கம் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் பின்வருமாறு கூறினர்:

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தேசியப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் தமிழரசுக்கட்சிக்கு அழைப்பு அனுப்பும் பட்சத்தில் தமிழரசுக்கட்சி அரசாங்கத்தின் கொள்கையைத் திட்டவட்டமாக அறிந்துகொண்ட பின்னரே பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தும்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும், அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயகாவும் இரு தடவைகள் எம்மை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினர். எம்மு

(5ம் பக்கம் பார்க்க)

## கலால் இலாகா சன்மானம்

கொழும்பு, செவ்வாய்

பொலிஸ் இலாகா வழங்கும் சன்மானம் போன்று, கலால் இலாகாவும் சன்மானம்வழங்க உள்நாட்டமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கசிப்பு தயாரிப்பை ஒழிக்கும் நோக்கத்துடனேயே இவ்வித சன்மானம் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தத்திட்டம் செயல்முறைக்கு வந்தால் கலால்பகுதியினருக்கு சட்டவிரோத கசிப்பு தயாரிப்பு சம்பந்தமாக தகவல் தெரிவிப்பவர்களை கசிப்பு தயாரிக்கும் முதலாளிகள் துன்புறுத்தாது இலாகா பாதுகாத்துக்கொள்ளுமென்றும், தகவல் தெரிவித்தவர்கள் பற்றி பிறர் அறியாதவாறு இலாகா கண்காணித்துக்கொள்ளுமென்றும் அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சிவராத்திரி விழா

துர்க்கைபுலம், பிள்ளையார் கோவிலில் சிவராத்திரி விழா விற்கு திரு. எம். யோகலிங்கம் தலைமைவகித்தார். அவர் தமது உரையில் சிவராத்திரியின் மகிமையை விளக்கிக் கூறினர். மற்றும் பலர் பேசினர். இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.

## கோண்டாவிலில்

கோண்டாவில் மேற்கு சைவ அபிவிருத்திச் சங்க ஆதரவில் மகாசிவராத்திரி ஸ்ரீ காளி தேவி கணேச ஆலயத்தில் நடைபெற்றது.

## கொடிகாமத்தில்

"உணவுக்கு வேண்டிய பொருட்களை உற்பத்திசெய்வோரும், அறிவு விருத்திக்கான பிரசாரங்களைச் செய்வோரும் ஆன்மா ஈடேற்றத்துக்கான பணிகளை ஆற்றுவோரும் தெய்வப்பணியைச் செய்தவர்களாகின்றார்கள்" என்று கொடிகாமத்தில் கட்டைபறிச்சான் பிள்ளையார் கோயிலில் நடந்த சிவராத்திரி விழாவில் பேசும்போது திரு. பேரம்பலம் செல்லையா கூறினர்.

## திருநெல்வேலியில்

திருநெல்வேலி இந்து இளைஞர் இயக்க மண்டபத்தில் இயக்கத்தலைவர் செ. சிவலிங்கம் தலைமையில் சிவராத்திரிவிழா கொண்டாடப்பட்டது. விழாவில் பலர் சொற்பொழிவாற்றினர்.

## ஊர்காவற்றுறையில்

"கல்வி அறிவு வெறும் ஏட்டு அறிவாக இருககாது, பயனுடையதாக இருக்கவேண்டும். அறிவைப் பயன்படுத்தி நாம் வாழவேண்டும். அருட்பாடல்கள் இறைவன் அருளைப்பெற நமக்கு உதவுகின்றன. நாயன்மார்கள் காட்டிய சைவநெறியைச் சைவமக்கள் பின்பற்றி வாழ வேண்டும்." இவ்வாறு சங்கீதபூஷணம் திரு. பி. சந்திரசேகரம் சரவணை—நாரந்தனைக் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் 'சிவராத்திரிமகிமை' என்னும் தலைப்பில் [illegible]ரை நிகழ்த்துகையில் குறி[illegible]பிட்டார்.

சரவணை—நாரந்தனை ஸ்ரீமுருகன் சனசமூகநிலையத்தினரால் நடத்தப்பட்ட இவ் விழாவிற்கு திரு. நா. கந்தஞானி தலைமைவகித்தார்.

# வருடாந்த உற்சவம்

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவங்கள் கடந்த பத்துத் தினங்களாக தொடர்ந்து நடைபெற்று தேர்த்திருவிழாவுடனும் தீர்த்தோற்சவத்துடனும் முடிவடைந்தது.


## வரி விளம்பரம்

யாழ். மற்போர் கைப்போர் கழகம் (Jaffna Wrestling and Boxing Club) பயிற்சி வகுப்பு ஆரம்பம் 1-3-63. விபரங்களுக்கு எழுதவும். கா. துரைசிங்கம், காரியதரிசி, சுழிபுரம். 700

## தொய்வு; நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## செய்தித் திரட்டு

### சங்கக் கூட்டம்

உடுப்பிட்டி, செவ்.

உடுப்பிட்டித் தொகுதி பாடசாலைகளின் தலைமை ஆசிரியர் சங்கக் கூட்டம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில், பாடசாலை பரிசோதகர் திரு. வீ தர்மசங்கரி தலைமையில் நடைபெற்றது.

நெல்லியடி மெ. மி. பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஜே. கே. செல்லத்துரை காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

### உபதலைவர் தெரிவு

கொடிகாமம், செவ்.

கச்சாய்க் கிராம சபையின் கூட்டம் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்ற போது கிராமசபையின் புதிய உப-தலைவராக திரு. எஸ். எஸ். சரவணமுத்து தெரிவு செய்யப்பட்டார்.

### உறுப்பினர் தெரிவு

கொடிகாமம், செவ்.

சிதம்பரத்திலுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தருமபரிபாலன சபையின் தர்மகர்த்தாக்களின் இடம் காலியானதற்கு சிதம்பரம்தில்லை நடராஜர் சன்னிதான தீக்ஷிதரில் ஒருவரான சாகித்யகர்த்தா, பிரம்மஸ்ரீ சுவர்ணவெங்கடேசதீக்ஷிதர் கடலூர் ஜில்லா மாவட்ட நீதிபதி ஸ்ரீ பி. லட்சுமணனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### 44-வது விழா

யாழ்ப்பாணம், செவ்

44-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா ஏப்ரல் மாதம் 14-ம் திகதி நடைபெறும். விழாவில் பல போட்டிகள் இடம் பெறும்.

### துப்பாக்கிச் சூடு வழக்கு

நீர்கொழும்பு, செவ்

தலுவக்கொட்டுவா என்ற கிராமத்தைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் அபயசேகரா என்பவர், பிரான்சிஸ் எட்மன் ஆகிய இருவரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாக தொடரப்பட்ட வழக்கு அடுத்த மாதம் 5-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### பரிதாப மரணம்

நீர்கொழும்பு, செவ்

நீர்கொழும்பு கடற்கரை வீதியைச் சேர்ந்த இரு குழந்தைகள் வீட்டினுள் விளையாடிக் கொண்டிருந்த சமயம், ஒரு விசர் நாயினால் கடிபட்டு ஒரு கிழமையின்பின் ஒரு குழந்தை மரணமானது. மற்றக்குழந்தை அபாயகரமான நிலையிலுள்ளது.

### பாலத்துக்கருகில் மைசூர் பருப்பு

இரத்தினபுரி, செவ்.

முவகம பாலத்துக்கருகில், 200 ருத்தல் மைசூர் பருப்புக் கொண்ட 4 சாக்குப் பைகளை சிலர் கண்டு பிடித்துள்ளனர். ஆற்றில் வீசப்பட்டிருக்கும் மைசூர் பருப்பு மர்மம், மர்மமாகவே இருக்கிறது.

### காதல் மரணம்

வஹாகொட்டே, செவ்.

21 வயதுள்ள சுப்பிரமணியம் என்பவர், கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். காதல் தோல்விதான் காரணமெனக் கூறப்படுகிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

# ஒற்றுமைக்கு ஒரு வழி!

தேசிய ஒற்றுமை என்ற தலைப்பில் 21-2-63 "ஈழநாட்டில்" திரு. ஜே பி, அரியநாயகம் முதலில் தமிழர் ஒன்றுபடவேண்டுமெனக் கூறியிருந்தார். "தமிழ் மொழி பேசும் இனங்கள்" என்று படவேண்டுமென எழுதியிருந்தால் மிக நலமாக இருந்திருக்கும். இதில் முஸ்லிம்கள், ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், தமிழ் மொழி பேசும் பௌத்தர்கள் அடங்குவர். சிங்களப்பகுதிவாழ் முஸ்லிம்கள் பலருக்கு, அவர்களும் இநநாட்டு மக்களாகக் கணிக்கப்படுவார்களா? என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. பல்லாண்டுகளாக யாழ்ப்பாணத்தில் வசிக்கும், ஒரு சில தமிழர்கள் கள்ளத்தோணிகளெனக் கூறி கைது செய்யப்படுவதாகப் பத்திரிகைகளில் படிக்கின்றோம். யு. என். பி. அரசாட்சிக் காலத்தில், பிரஜாவுரிமைச் சட்டம், போக்குவரத்து, விசா சட்டம் போன்ற பல சட்டங்கள் உண்டாயின. இவைகளால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சில இடையூறுகளை முளையிலேயே திரு. செல்வநாயகமவர்களுடன் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களும் சேர்ந்து எதிர்த்திருந்தால் தமிழ்மொழி பேசும் இனங்கள் நிலை, "கழுதை தேய்ந்து கட்டெறும்பாகப்" போன கதையாக வந்திருக்காது! மகா சிவராத்திரி வணக்கத்துக்காக இந்துக்கள் 20 மைல் தொலைவிலுள்ள தமிழ் நாட்டிலுள்ள கோவில்களுக்குப் போய் வழிபாடு செய்துவருவர். இறுதியாக இன்று இதற்கும் தடை! ஏழு வருடக் கட்டுப்பாடு. இன்று ஹிந்து மக்களின் மத உரிமைகளும் பறிக்கப்படுகின்றன! சமீபத்திலுள்ள கோயில்களுக்கோ, அல்லது முஸ்லிம்கள் நாகூருக்கோ போய்வர, சுமார் 150 ரூபாய்க்குமேல் செலவு ஏற்படாது! இராமேஸ்வரம், இலங்கையிலிருந்து சுமார் 50 மைல்களுக்குள் தான் இருக்கும். செலாவணிக் கட்டுப்பாட்டின் பெயரில் மனிதனின், மத உரிமை பறிக்கப்படுகிறது! வருடந் தோறும் நாகூர் செல்லும் முஸ்லிமகள் இவ்வருடம் எப்படி நாகூர் போவது என்று கவலைகொண்டிருக்கின்றனர்.

மேலும் இலஙகைத் தமிழர்களில் பலர் இலங்கைக் காங்கிரஸிலுள்ள நம்பிக்கையை இழந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஏனெனில் அக்காங்கிரஸை சேர்ந்த பலர் "யு. என். பி"யை இன்னும் நம்பிக்கொண்டிருக்கின்றனராம்! எனவே, "தமிழ் மொழி பேசும் இனங்கள்" "தேசிய ஒருமைப்பாடு" பெற வேண்டுமானால், இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைக் கலைத்து விட்டு எல்லோரும், "தமிழரசுக் கட்சியில்" சேர்ந்துவிடுவதே நல்! மலைநாட்டுத் தமிழர்கள் நூற்றுக்கு நூறு இக்கட்சியைத்தான் ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது. "இலங்கையை இந்தியா கைப்பற்றிவிடுமென" திரு. ஆர். ஜி. சேனநாயக்கா அவர்கள் கூறிய "சரடு", பஞ்ச தந்திரக் கதைகளில்கூட நாம் படித்திருக்கமாட்டோம்!

அல்-ஹாஜ் வி. எம். ஷம்சுத்தீன்
கொழும்பு

## "ஜனநாயகத்துக்கு விரோதம்"

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாநகரசபை 17 வட்டாரங்களாகப் பிரிக்கப்படுவது ஜனநாயகத்திற்கே விரோதமான செயல் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சி மத்திய செயற்குழு தீர்மானமொன்றினை நிறைவேற்றியுள்ளது.





ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு [illegible] ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெ[illegible]

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்[illegible]றது.

CWE [illegible] 119

# போர்க்கைதிகளை சந்திக்க செஞ்சிலுவைச்சங்க கோஷ்டிக்கு அனுமதியில்லை

## நேரடியாகப் பேசித்தீர்க்க வேண்டியது என்கிருர் சென்யீ

ஜெனிவா, பெப்ரவரி 26

சீனர் வசமுள்ள இந்திய போர்க் கைதிகளை பார்வையிட்டு அவைகளின் பிரச்னைகளை ஆராய்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைக் சங்கத் தூதுகோஷ்டிக்கு சீன அரசாங்கம் அனுமதியளிக்க மறுத்துவிட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தலைமைக் காரியாலய அறிக்கையொன்று தெரிவிக்கிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் லீவோஸ் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் கோஷ்டியொன்றுக்கு இந்தியப் போர்க் கைதிகளைச் சந்திப்பதற்கு அனுமதியளிக்குமாறு கேட்டிருந்தது. செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுமதி மறுத்த சீன அரசாங்கம் இந்திய போர்க் கைதிகள் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் இந்தியாவும் — சீனவும் நேரடியாகத் தீர்த்துக் கொள்ளவேண்டியவை என்று தெரிவித்துள்ளது. "போர்க் கைதிகள் பிரச்னை இரு நாடுகளும் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் தீர்க்கப்படவேண்டியவை" என்று சீன உதவிப் பிரதமர் மார்ஷல் சென் யீ கூறினராம்.

### லடாக்கில் சீனர் வெளியேறிய பகுதி

இந்தியப் பிரதமர் திரு. நேரு பேசுகையில் லடாக்கில் உண்மையான நடப்புக் கட்டுப்பாட்டுக் கோடு என சீனர் கூறிய எல்லைக்கு சீனத் துருப்புகள் திரும்பிச் சென்றுவிட்டார்களென்றும் சீனர் வெளியேறிச் சென்ற இடைவெளிப் பகுதியில் சிவில் நிலைகள் இன்னும் அமைக்கப்படவில்லையென்றும் சிவில் நிலைகள் அமைப்பது அடிப்படையில் ராணுவ விஷயமானதென்றும் இது ராணுவம் தீர்மானிக்கவேண்டிய விஷயமென்றும் கூறினர். வேறு பகுதிகளில் சிவில் நிலைகள் அமைக்கப்பட்டுள்ளதென்றும் பிரதமர் நேரு தெரிவித்தார். வட கிழக்கு எல்லை ஏஜன்சிப் பகுதியில் சிவில் நிலைகள் தவிர ராணுவ நிலைகள் அமைப்பதுபற்றிய ஒரு கேள்விக்கு பிரதமர் நேரு பதிலளிக்கையில் அங்கு துப்பாக்கிப் படையினரையோ முறையான ராணுவத்தினரையோ அனுப்புவது எமது இஷ்டத்தைப் பொறுத்தது என்ருர்.

### முறையில் மாற்றம் கொள்கையில் இல்லை

"சீன ஆக்கிரமிப்பின் விளைவாக பிரச்னைகளை அணுகும் விதத்திலும் சில நாடுகள் சம்பந்தமாக கொண்டிருந்த கருத்தினும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சமாதானம், சோஷலிஸம், நடுநிலைமை ஆகிய எமது அடிப்படைக் கொள்கைகளில் மாற்றமெதுவும் இல்லை. இக் கொள்கைகள் இப்போதுள்ள நெருக்கடி காலத்தில்தான் முக்கியம். இக்கொள்கையை நாம் கைவிட்டால் சீனவிடம் சரணகதியடைந்ததாகிவிடும். எமது நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்ளவேண்டும். நட்பு நாடுகள் எமக்கு உதவி புரியலாமே தவிர அவைகள் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. சீன எமது நாட்டின்மீது தாக்குதல் நடத்தியதும் எமது வேண்டுகோளுக்கிணங்கி உடனடியாக உதவி அளித்த பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் ராணுவக் கூட்டில் எம்மை சேர்த்துக்கொள்ள நினைக்கவில்லை. எமது நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொள்ளவும் விரும்பவில்லை. எந்தவித நிபந்தனையுமின்றித்தான் எங்களுக்கு அவைகள் உதவியளிக்கின்றன" என்று பிரதமர் நேரு கூறினர்.

### சிக்கிம், புட்டான் பாதுகாப்பு

சிக்கிம், புட்டான் பாதுகாப்புப்பற்றி பிரதமர் நேரு குறிப்பிடுகையில் சமீபத்தில் சிக்கிமுடன் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்தின்படி, சிக்கிமுடன் பாதுகாப்புக்கு இந்தியா சில பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளதென்றும் அதை நிறைவேற்றுமென்றும் கூறினர்.

# காஷ்மீர் சமரசபேச்சு நிறுத்தப்படுமா?

## புதுடில்லிவட்டாரங்கள்கருத்து

புதுடில்லி, பெப். 26

சீன – பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதைத் தொடர்ந்து காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட இதர பிரச்னைகள் சம்பந்தமாகவும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்படலாமென புதுடில்லி வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது

நேற்று ராஜ்ய சபையில் பிரதமர் நேரு பேசுகையில் பாகிஸ்தான் – சீன எல்லை ஒப்பந்தம்பற்றிக் குறிப்பிடுகையில், காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளைக் குலைக்கும் நோக்கத்துடன்தான் சீன –பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதை இச்சமயத்தில் வேண்டுமென்றே வைக்கப்பட்டிருக்கிறதென்ருர்.

இந்திய – பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகள்பற்றி இந்தியா புனராலோசனை செய்ய வேண்டிய சாத்தியக் கூறுகளிருப்பதாகவும் பிரதமர் நேரு கூறினர்.

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் எல்லை சம்பந்தமாக சீனவுடன் பாகிஸ்தான் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதால் ஏற்படக்கூடிய பலாபலன்பற்றி இப்பொழுது எதுவும் சொல்லக்கூடியதாக இல்லையென்று அவர் கூறினர்.

### இறுதிப் பேச்சு

சீன – பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக பீக்கிங் செல்லும் வழியில் கல்கத்தா டம்டம் விமான நிலையத்தில் சிறிது நேரம் தாமதித்த பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனப் புட்டோ நிருபர்களின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், கல்கத்தாவில் அடுத்த மாதம் 12-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் இந்தியா – பாகிஸ்தான் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள்தான் இறுதியானதாகவிருக்குமென்றும் இதில் காஷ்மீர் பிரச்னைக்கு சமுகமான தீர்வு காணப்படாவிட்டால் மேலும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் விரும்பவில்லையென்றும் கூறினர்.

# இந்தியச்செய்திகள்

### ஒப்புக் கொண்டார்

கல்கத்தா, பெப். 26

வங்காளத்தில் அரிசி விலை அதிகரித்து விட்டதென்பதை முதல் மந்திரி திரு. பி. ஸி. சென் மேற்கு வங்காள மேற்சபையில் ஒப்புக்கொண்டார்.

∴ ∴ ∴

### விவாதம்

புதுடில்லி. பெப். 26

அரசாங்கத்தின் தங்க கட்டுப்பாடு கொள்கையைப்பற்றி மார்ச் 4-ம் திகதி லோகசபையில் விவாதம் நடைபெறும் என்று தெரிகிறது.

∴ ∴ ∴

### பொற்கொல்லர் தற்கொலை

சென்னை, பெப். 26

கொன்டித்தோப்பைச் சேர்ந்த அண்ணமலை (வயது 20) என்ற பொற்கொல்லர் விஷமருந்தி இறந்துவிட்டார். அவரது சடலம் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது.

∴ ∴ ∴

### குடிபோதையில் சிறுவர்கள்

கல்கத்தா, பெப். 26

குடிபோதையில் இருந்த விமானப்படை விடுதியைச் சேர்ந்த சில சிறுவர்கள் அருகில் உள்ள சிலகுடிசைகளை தாக்கியதையடுத்து ஏற்பட்டது மோதலில் 30-க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

∴ ∴ ∴

### தொழிற்சாலை

சிதம்பரம், பெப். 26

14 காரட் தங்க நகைகளைத் தயாரிக்க தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதென்று சிதம்பரம் நகை வியாபாரிகள் சங்கம் விசேஷ கூட்டமொன்றில் முடிவு செய்தது.

∴ ∴ ∴

### சிறையில் பிரசவம்

திருவள்ளூர், பெப். 26

திருவள்ளூர் சிறையில் காவலில் இருந்த கமலா என்ற பெண் ஒரு பெண்குழந்தையைப் பெற்றெடுத்தார்.

∴ ∴ ∴

### ரத்தானது

பாஞ்சீம், பெப். 26

கோவா, டையு, டாமன் ஆகிய பிரதேசங்களுக்கும் நாட்டின் மற்றப்பிரதேசங்களுக்குமிடையே இருக்கும் சுங்கத் தடைகள் உடனடியாக ரத்து செய்யப்பட்டுவிட்டதாக உத்தியோக பூர்வமாக இங்கு அறிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

### உற்பத்தி அதிகரிப்பு

புதுடில்லி, பெப். 26

உள்நாட்டுத் தேவைகளுக்கும், ஏற்றுமதிகளுக்கும், வருடத்துக்குகுறைந்தபட்சம் 40லட்சம் டன் சர்க்கரை தயாரிக்கும் வகையில் கரும்பு உற்பத்தி அதிகரிக்கக் கூடும்.

∴ ∴ ∴

### பிக்குவானர்

சென்னை, பெப். 26

சென்னையிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள புத்தவேடு என்ற கிராமத்தில் சுமதா என்ற மராட்டியர் கஷாயம் பெற்று விதிமுறைப்படி புத்த பிக்குவானர். இலங்கையைச் சேர்ந்த சுவாமி நந்தேசுவர தேரோ சடங்குகளை நடத்தி வைத்தார்.

∴ ∴ ∴

சென்னை, பெப். 26

அண்ணமலை நகரில் 27-ம் தேதியன்று சர்வகலாசாலை உப அத்யட்சகர் டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர் வெற்றி பாதை கண்காட்சியை துவக்கி வைப்பார்.

∴ ∴ ∴

சித்தூர், பெப். 26

சித்தூர் அருகே தோத்த[illegible] கோட்டா என்னுமிடத்தில் ஏ[illegible] பட்ட ஒரு லொறி விபத்தி[illegible] ஷாப் ஜான் என்ற பொலி[illegible] கான்ஸ்டபிளும் அந்த [illegible] கிளீனரும் மாண்டனர்.

# வடஜப்பானில் கோரத்தீ! மூன்று பட்டினங்கள், நகரங்கள் சேதம்!

டோக்கியோ, பெப். 26

டோக்கியோவுக்கு140மைல் வடகிழக்கில், வடக்கு ஜப்பானில் நேற்று ஏற்பட்ட கோரத் தீ விபத்தில் முன்னூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வீடிழந்தன. மூன்று பட்டினங்களுக்கும் கிராமங்களுக்கும் தீ பரவியது. கொழுந்து விட்டெரிந்த தீயின் சுவாலைகளுக்கிடையில் மக்கள் தங்கள் கையில் அகப்பட்ட பொருள்களுடன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு குழந்தை குட்டிகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு ஓடிச்சென்று தஞ்சமடைந்தவர்கள் அங்கும் தீபரவவும் அங்கிருந்தும் ஓட்டம் பிடித்தனர். மூன்று பட்டினங்களிலும் கிராமங்களிலும் ஒரே அல்லோல கல்லோலம். எத்தனை பேர்மண்டனர் எவ்வளவு சேதம் என்பது இன்னும் தெரியவில்லை பெருந்தொகையான நிலப்பரப்பில் சேதம்மேற்பட்டுள்ளது. தீப்பிடித்த சமயத்தில் மணிக்கு 56 மைல் வேகத்தில் காற்று வீசியதுதான் இவ்வளவு கோரமாக தீ பரவியதற்குக் காரணம் சுமார் மூவாயிரம் தீயணைக்கும் படையினரும் பெருந்தொகையான தீயணைக்கும் என்ஜின்களும் நீண்ட நேரமாகப் போராடி தீயை அணைத்தனர்.

## ஈரானிடமிருந்து துணி இறக்குமதி

கொழும்பு, செவ்வாய்

ஈரானிடமிருந்து ஜவுளியை வாங்க இலங்கை முடிவுசெய்துள்ளது.

இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உணவு, வர்த்தக, கப்பல்போக்குவரத்து அமைச்சு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன உதவி ஜெனரல் மனேஜரை டெஹ்ரானுக்குச் செல்லுமாறு கேட்டுள்ளது.

ஈரானுக்கும் இலங்கைக்குமிடையே சென்றவருடம் கைச்சாத்தான வர்த்தக ஒப்பந்தப்படி ஈரானுக்கும் இலங்கைக்குமிடையே வர்த்தக விஸ்தரிப்புச் செய்யஏற்பாடாகியுள்ளது.

## ஹாங்காங் கட்டிடஸ்தாபன உதவி

கொழும்பு, திங்கள்

அரசாங்கத்துக்கு 4,000 மாடி வீடமைப்புக் கட்டிடங்களை நிறுவிக்கொடுக்க, ஹாங்காங்கிலுள்ள ஒரு கட்டிடஸ்தாபனம் முன்வந்திருக்கிறது. இந்தக்கட்டிடங்களை நிறுவுவதற்கு 4கோடி ரூபாய் செலவாகுமாம்.

இந்தப்பணம் நாலரைச்சத வட்டி வீதம், பத்து வருடகாலத்தில் திருப்பிக் கொடுக்கப்படும். இந்த வீடமைப்புத் திட்டம் 5 வருட காலத்தில் பூர்த்தியாகும்.

### மணி வாக்கு

மனிதன் தெய்வீகமாவதே வாழ்க்கையின் இலட்சியம். நமது பலவீனத்தாலோ, குறைகளாலோ அந்த இலட்சியத்தைக் குறைத்துவிடக்கூடாது. என்னிடமுள்ள குறைகுற்றங்களை நானறிவேன். இவற்றை நீக்க எனக்கு உதவி புரியும்படியே தினசரி மௌனமாக நான் அந்த உண்மைப் பொருளிடம் பிரார்த்தனை செய்து வருகிறேன்.

—மகாத்மாகாந்தி.

ஈழநாடு

EELANADU: National Tami Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 15 உ (27-2-63)

## அரசாங்க ஊழியருக்கு புதிய பூச்சாண்டி

தாங்கள் இலங்கைப் பிரஜைகள் என்பதை நிரூபிக்கத் தவறும் அரசாங்க ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப் படக்கூடுமென்று ஒரு புதிய பூச்சாண்டி கிளம்பியுள்ளது. திறைசேரிக் காரியதரிசி இவ்விஷயமாக எல்லா இலாகாக்களுக்கும் அனுப்பியுள்ள ஒரு சுற்றுத்தரவில், அரசாங்க ஊழியருக்குப் பதவி உயர்வு முதலியவை அளிக்கப் படுமுன் அவர்கள் இலங்கைப் பிரஜை என்பதை நிரூபிக்கவேண்டுமென்று நிபந்தனை போட்டிருக்கின்றார். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இது நியாயமானதாகத்தோன்றலாம். ஆனால் சிங்களவருள்விட்டு, பல ஊழியர்களுக்கும் இதனால் ஏற்படக்கூடிய மனவேதனையும் இம்சையும் கொஞ்சமன்று.

ஒருவர் தாம் இலங்கைப் பிரஜை என்றுநிரூபிக்க, தமது பிறப்புப்பத்திரத்தையும், தமது தந்தையின் பிறப்புப் பத்திரத்தையும் காட்டவேண்டியிருக்கும். தங்கள் சொந்தப் பிறப்புப்பத்திரத்தை எடுப்பதே சிலருக்கு முடியாதிருக்கையில், தந்தையின் பிறப்பைப்பற்றிய பத்திரத்தையும் எடுப்பதென்பது அநேகமாக முடியாததாகும். இந்நிலையில் இந்த உத்தரவைக் கண்டிப்பாக அமுலுக்குக் கொண்டுவரின், இங்கு சிங்களவரில் பலரும்கூட தங்கள் பிரஜா உரிமையை நிரூபிக்கமுடியாமல் வேலையை இழக்கநேரிடும். இந்நிலையில் சிங்களவரல்லாதாரின் நிலை எவ்விதமிருக்குமென்பதை விளக்கத் தேவையில்லை.

பதவிக்கு நியமிக்குமுன்னரேயே, இலங்கைப்பிரஜையா அல்லவா என்பதையெல்லாம் பார்த்திருக்கவேண்டும். நியமித்தபின் பலவருடங்கழித்து, இவ்வித அத்தாட்சிகளைக்கேட்பது நேர்மையாகாததுடன் இம்சையுமாகும். 1948-ம் வருடம் பிரஜாஉரிமைச் சட்டம் நிறைவேற்றியதற்கு முன், அரசாங்க சேவையில் நியமிக்கப் பட்டவர்களிடம், இவ்வித அத்தாட்சிகளைக் கேட்டு, நடவடிக்கை எடுப்பது நீதியாகாது தான்செய்த ஒரு தவறுக்காக ஊழியரையும் அவரது குடும்பத்தையும் தண்டிப்பது மனிதாபிமானமுமன்று.

நிம்மதியான மனதுடன் இருந்தாலே ஒருவர், தமது கடமையைத் திறமையாகச்செய்ய முடியும். மொழி, பிரஜா உரிமை முதலிய புதிய புதிய பூச்சாண்டிகளைக் காட்டி தங்கள் ஊழியர்களைப் பயமுறுத்துவது, அரசாங்க நிர்வாகத்தை மேலும் சீர்குலைப்பதாக முடியும். பிரஜாஉரிமை முதலிய நிபந்தனைகளை இனிப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் விஷயத்தில் காட்டலாம். அப்படி இன்றி, உலகில் எங்குமே இல்லாதபடி கடுமையான பிரஜாஉரிமைச் சட்டம் நிறைவேற்றி, இலங்கையில் பிறந்தவர்களில் லட்சக்கணக்கானவருக்கும் பிரஜாஉரிமை மறுத்து, ஏற்கெனவே நியமிக்கப் பட்டவர்களையும் இப்புதிய உத்தரவுகளால் இம்சைக்கு உள்ளாக்குவது, ஒரு நாகரிக அரசாங்கத்துக்குஅழகாகாது. ஐ. நா. மனித உரிமைச் சாஸனத்தில் கையொப்பமிட்டுள்ள அரசாங்கம் இவ்விஷயத்தில் அதற்கிணங்கக் காரியம்செய்ய வேண்டும். அரசாங்கம் அவசரப்பட்டு நடவடிக்கை எடுக்குமாயின், பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்ற உதவியை நாடி தங்கள் உரிமையைக் காத்துக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை. அரசாங்கம் தன் ஊழியர் விஷயமாகத் தாராள மனப்பான்மைகாட்டினால்தான் ஊழியரும் நிம்மதியாகக் கடமைசெய்யவும் நிர்வாகம் திறமையாக நடைபெறவும் முடியும்.

## பெட்ரோல் விலை நிர்ணயம்

பெட்ரோலின் ஆகக்கூடுதல் இறக்குமதி விலையை கலன் ஒன்றுக்கு 48 சதமென்று நிர்ணயிக்கவேண்டுமென்று வர்த்தக மந்திரி அரசாங்கத்துக்குச் செய்துள்ள சிபார்சு அமுலுக்குவரின் இங்கு பெட்ரோல் கம்பெனிகள் தொடர்ந்துவியாபாரம் நடத்தமுடியாதுபோகக் கூடும்.

இலங்கை பெட்ரோல் கார்ப்பரேஷன் சூப்பர் பெட்ரோல் 44 சதவீதமும் சாதாரணபெட்ரோல் 36 சத வீதமும் இறக்குமதி செய்கிறது. இத்துடன் ஒப்பிடுகையில் 48 சதமாக இறக்குமதி விலையை நிர்ணயிப்பதை நியாயமற்றதென்று கூற முடியாது.

ஆனால் எண்ணெய்க் கம்பெனிகள் இதுவரை முறையே 58 சத வீதமும் 48 சத வீதமுமே இருவித பெட்ரோல்களையும் இறக்குமதி செய்கின்றன. மந்திரியின் யோசனை அமுலுக்குவரின், மற்ற எண்ணெய்க் கம்பெனிகள், சூப்பர் பெட்ரோல் வியாபாரதலைதக் கைவிடவேண்டி இருக்கும்.

இலங்கையின் செலாவணியைப் பாதுகாக்கவேண்டி இருக்கையில், பெட்ரோல் இறக்குமதி விலையைக் கட்டுப் படுத்தவேண்டிய அவசியம் அரசாங்கத்துக்குஉண்டுதான். ஆனால் இந்த நடவடிக்கையை மற்ற அரசாங்கங்களின் நல்லுறவுகளை முறித்துக்கொள்ளாதபடி, கூடுமானவரை சௌஜன்யமாகக் கலந்துபேசி முடிவுசெய்வது விரும்பத்தக்கதாகும்.

### கிறிஸ்தவர்களின்

# லெந்தென்னும் நோன்புநாட்கள்

இன்று 27-ம் திகதிலெந்து நாட்களின் முதல் நாளாகிய சாம்பற் புதன்கிழமை. இந் நாளிலிருந்து உயிர்த்தெழுந்த பண்டிகையாகிய ஈஸ்டர் வரையிலும் முள்ள நாற்பத்தேழு நாட்களில் ஏழுஞாயிறுகளையுந்தவிர்த்து. மிகுதியான நாற்பது நாட்களும் லெந்தென்னும் நோன்பு நாட்களாகத் திருச்சபையினால் பல நூற்றுண்டுகளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. கி. பி. 189 லேயே லெந்தைப்பற்றித் திருச்சபை பிதாககளில் ஒருவராகிய ஐரேனியஸ் தனது எழுத்துக்களில் குறிப்பிட்டுள்ளார்.

"லெந்து" என்னும் இப்பதத்திற்கு 'வசந்தம்' அல்லது 'இளவேனில்' என்பது பொருள். 'இளவேனில்' ஒரு ஆண்டின் நான்கு பருவங்களில் முதற் பருவமும், வளர்ச்சி காலத்தைக் குறிக்கும் பருவமுமாயிருப்பது போலவும், இயற்கை புத்துயிர் பெற்று மிளிருங்காலமுமாய்த் திகழ்வது போல லெந்தென்னும் நோன்பு நாட்களும், கிறிஸதவன் தனது ஆத்மீக வாழ்க்கையில் புதிய வளர்ச்சி அடையக்கூடிய வளரும் பருவத்தைக் குறிக்கிறது. அத்தோடு மாரிகாலத்தின் பின் இளவேனிற் காலந் தொடங்கும் போது நாம் நமது வீடுகளையும் வளவுகளையுஞ் சுத்திகரிக்குமாப்போல், இந்நோன்பு நாட்களில் நம்மை நாமே இறைவனின் அருளினாலும் எம் நன் முயற்சியினாலும சுத்திகரிக்குங் காலமாகவும் இது கருதப்படுகிறது. ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்து ஊழியத்தைத் தொடங்கமுன் வனாந்திரத்தில் செய்த உபவாசத்தையும் அதன்பின், பிசாசினால் நேர்ந்த சோதனைகளை ஆண்டவர் வல்லமையுடன் வென்றதையும் நினைந்தே இந்த நாற்பது நாற்களைத் திருச்சபை அனுசரித்து வருகிறது.

இந்த நோன்பு நாட்களைப் பலர் பல வகையாக அனுசரித்து வருகின்றனர். இதனை எவ்விதமாக அனுசரித்தல் வேண்டுமென நாம் சிந்தித்தல் அவசியமாகும். இந்நாட்களில் நம்மை நாமே உற்று நோக்கி ஆராந்தறிய வேண்டும். கிறிஸ்தவ வழிகளில் நமது வாழ்வு முன்னேறுதிருப்பதின் காரணம் என்ன? நமது வாழ்வில் என்னென்ன குறைகள் காணப்படுகின்றன? நாம் விருப்பத்தோடு செய்து வரும் பாவங்களேவை? நாம் எல்லாக் காரியங்களிலும் உண்மையுள்ளவர்களாயிருககிறோமா? நாம் ஈடுபட்டுள்ள நமது வேலைகளில் உண்மையாக உழைக்கிறோமா? நமது செப வாழ்க்கை ஆழமானதாகவும் வலிமையுடையதாகவுமிருக்கிறதா? கடவுளைப் பற்றி அறிகிற அறிவில் வளர்ச்சியடைந்து கொண்டு போகிறோமா? என்பன போன்ற கேள்விகளை நம்மை நாமே கேட்டுத் தற்பரிசோதனை செய்வது அவசியம்.

நம்மை நாமே தற்பரிசோதனை செய்து, நமது பாவங்களின் அகோரத்தை யறிந்து பின் அவற்றிற்காக மனம் [illegible]து பாவ அறிக்கை செய்து இறுதியாக இறைவனின் திருவருளால் பாவமன்னிப்பைப் பெற்று நமது வாழ்க்கையைப் புதிதா ஆரம்பிகக இந்நாட்கள் நமக்குதவுகிறது.

அடுத்தபடியாக, இந்நோன்பு நாட்களில் நமது வாழ்க்கையைத் தன்னடுக்கத்துடன் கட்டுப் படுத்த நாம் பழகுதல் வேண்டும். நமது வாழ்க்கையை ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடக்குங் காலமாக இதனைப் பாவிப்பது நல்லது. நமது மீட்பராகிய இயேசுக் கிறிஸ்துவின் வாழ்வே தேவ சித்தத்திற் கேற்ப நடக்கும் கட்டுக்குள் அடங்கிய வாழ்வாயிருந்தது. இன்று நம்மில் அநேகர் கட்டுககுள் அடங்கி வாழவிரும்புவதில்லை, மனம் போனபோக்கில், சுயநல வாழ்வை வாழவே நாம் பெரும்பாலும் விரும்புகிறோம். பிறர் நலன் கருதி சுயநலனை வெறுத்து வாழ்வதற்காகவே நாம் அழைக்கப் பட்டுள்ளோம். விதிகளுக்கு கட்டுப்பாட்டிற்கும் அமைந்து வாழும் வாழ்வே இறுதியில் சிறப்புற்று ஒளிரும். ஆகவே சுய வெறுப்பின் மூலம், நமது உடலை ஆவியின் ஆளுகைக்குள் உட்படுத்தி அதன்பயனாய் நமது கிறிஸ்தவ வாழ்வை உறுதிப் படுத்தல் வேண்டும்.

இந் நாட்களில் நாம் தற்பரிசோதனை செய்வதிலும், தன்னடக்கத்தினாலும், சுய வெறுப்பினாலும், கட்டுப்பாட்டினாலும் நமது வாழ்வைச் சீர்ப்படுத்துவதோடு, நமது விசுவாசத்தின் உண்மைகளை நன்கறிந்து அதன் அடிகதளத்தை வலுப்படுத்த வேண்டியதவசியம். நமது சமய உண்மைகளை நாமே சிந்தித்துப் பரிசீலனை செய்து ஆராய்ச்சி செய்யாவிடில் இவை வெறும் சடங்காசாரங்களாகி விடும். அதனால் சமய உண்மைகள் நம்மில் வேரூன்றி உறுதிப்பட மாட்டா. நாம் விசுவாசிக்கும் உண்மைகளுக்கு நியாயஞ் சொல்ல அறிந்து கொள்வது நமது முதற் கடமையாகும். இந்தப் பயிற்சியையும் இந் நோன்பு நாட்களில் நாம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

—உதயதாரகை

## ஆசிரியர் சம்பளம் கணக்குப்பார்க்க இருவர் தெரிவு

கோப்பாய், செவ்வாய்

சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லையென்ற காரணத்துககாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆசிரியர்களின் சம்பள உயர்வு நிறுத்திவைககப்பட்டிருந்தகாலபாக்கிப்பணத்துடன் மார்ச்மாதம் முதல் மீண்டும் கொடுக்கப்படவிருக்கிறது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சம்பள உயர்வுப் பாக்கிப் பணத்தைக் கணக்குப்பார்த்து சம்பளப் பட்டியல் தயாரிப்பதற்காக வடபகுதிக் கல்விக் கந்தோருக்குப் புதிதாக இரு குமாஸ்தாக்கள் தற்காலிகமாக திரட்டப்பட்டுள்ளனர்.

தொழிற்கந்தோர் மூலம் தெரிவு செய்யப்பட்ட இந்த இருகுமாஸ்தாக்களும் சம்பளக் கணக்குப் பார்ப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

## ஆஸ்பத்திரி சுவீப் திருக்கோணமலைக்கு அதிர்ஷ்டம்

திருக்கோணமலை, செவ்வாய்

இம்முறை இழுக்கப்பட்ட ஆஸ்பத்திரி சுவீப் இழுப்பில் திருக்கோணமலையைச் சேர்ந்தவர்களே அதிக அதிர்ஷ்டசாலிகளாகக் காணப் பட்டுள்ளனர்.

முதலாவது பரிசான ரூ.62,925 திருக்கோணமலை கச்சேரி வீதியைச் சேர்ந்த திரு. வி. பொன்னுத்துரைக்கு கிடைத்துள்ளது. மூன்றாவது பரிசான ரூ. 15, 731 - 25 இங்குள்ள பன்குலத்தைச் சேர்ந்த திரு. எஸ். அழகுதுரைக்குக் கிடைத்துள்ளது.

கோவை, பெப். 26

கோவையில் ஒரு எஞ்ஜினியரின் வீட்டில் பணமும்,ஒரு கைக்கடிகாரத்தையும் பட்டப் பகலில் துணிகரமாகத் திருடிக் கொண்டு சென்றதாக கூறப் படும் ஒரு நபரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

## ஐயாறன் எழுதுவது

சென்ற சனி, ஞாயிற்றுக்கிழமையிலே, மலைநாட்டில் ஒரு தேயிலைத் தோட்டத்துக்குச் சென்றிருந்தேன். அந்தத் தோட்டம் சுமார் 4000 அடி உயரத்திலுள்ளது. நம் இலங்கையில் இயற்கை வனப்புத்தான் எவ்வளவு! ஸ்விட்ஸர்லந்தைவிட அழகானதாகும். சீதோஷணம் மிக சுகம். அங்கேயே இருந்துவிடலாம்போல் தோன்றியது. ஆனால்...!

* * *

"பார்க்குமிடமெல்லாம் நாமன்றி வேறில்லை நோக்க நோக்கக் களியாட்டம்......" என்று பாரதியார் பாடினரல்லவா? அங்குள்ள மக்களைப் பார்க்கும்போது இந்தப்பாடல் தான் எனக்கு நினைப்புவந்தது. அங்கு எல்லாம் தமிழ் பேசுகிறார்கள். தோட்டத்தின் வெள்ளைக்கார பெரிய துரை கூட ஒரு கூட்டத்துக்குத் தலைமைவகித்து கொச்சைத் தமிழில் பேசினர்.

"கெட்டவன் நல்லவனான கதை" என்ற தலைப்புடனே பெருமாள் என்பவர் தான் திருந்திய கதையை, ஈழநாடு பத்திரிகையில் முன்னர் எழுதியிருந்தாரல்லவா? அதே பெருமாளும், கொழும்பிலிருந்து வந்த சிங்கள டிரைவரும் அக்கூட்டத்தில் தமிழிலே பேசினர்!

மலைநாட்டிலே தமிழ் மொழி எவ்வளவு வேரூன்றிப் பரவியுள்ள தென்பதை, அக்கூட்டத்தில் காண மிக மகிழ்ச்சியாக இருந்தது.

* * *

அங்கு சில தொழிலாளரின் லயன் வீடுகளுக்குச் சென்று பார்த்து, அவர்களுடன் கதைத்தேன். பல வீடுகளில் 'பம்பாய் கக்கூஸ்' அமைக்கப் பட்டுள்ளது. பல வீடுகளையும் சாணத்தால் மெழுகி சுத்தமாக வைத்திருந்தனர். ஒவ்வொரு வீட்டிலும் முருகன் படம் வைத்து, ஊதுவின்க்கேற்றி இருந்தனர். சில வீடுகளில் சுவாமி படத்துக்குப் பக்கத்திலே எம். ஜி. ஆர். படமுமிருந்ததைக கண்டேன்!

சில தொழிலாளர் வீடுகளில், ரேடியோ, தையல் மெஷின் முதலியனவுமிருந்தன. குழந்தைகளெல்லாரும், சிரித்து அன்புடன் சுற்றிக்கொண்டார்கள். ரேடியோ ஏரியலுக்காக மூங்கில்கள் வைப்பது விகாரமாக இருக்குமென்று கருதி, ஓரிடத்தில் பொதுக் கம்பத்திலே பல கம்பிகளை இணைத்து, பல வீட்டு ரேடியோவுக்கும் ஏரியல் அமைத்திருந்த ஒழுங்கு மேலாக இருந்தது.

* * *

ஒரு வீட்டில் ஒரு இளம்தாய் கைக குழந்தையுடன் சிரித்து வரவேற்றார். அத்தாயும் தினசரி தோட்டத்தில் வேலை செய்வதுண்டாம். அதிகாலை 4 மணிக்கே எழுந்து, சமைத்துவிட்டு, 7 மணிக்கு பேர் கொடுத்து, கொழுந்து எடுக்கச் செல்வாராம். பிள்ளைக்காரி 11 ½ மணிக்கும் மற்றவர்கள் 12 மணிக்கும் வேலைவிட்டு, வீட்டுக்கு வந்து, பின்பு 1 மணிக்குப் போய், 4-30 அல்லது அல்லது 5 மணிக்குத் திரும்புவதாகச் சொன்னார்.

இப்படி தினசரி, வீட்டு வேலையையும் பார்த்துக்கொண்டு, தோட்டத்திலேவேலை செய்வது கஷ்டமில்லையா? என்று கேட்டேன். "என்ன கஷ்டம்!" என்று சிரித்துக் கொண்டே தலை அசைத்து, சிறு வயதிலிருந்தே, இது பழக்கமாகிவிட்டதால், ஒரு கஷ்டமுமில்லை என்று மலர்ந்த முகத்துடன் சொன்னார்.

* * *

அத்தோட்டத்திலே சுமார் 30 இஸ்லாமிய குடும்பங்கள் வேலை செய்கின்றனவாம். அவர்களுக்காக ஒரு பள்ளிவாசலுள்ளது. பாதிச் செலவை தோட்டத் துரையும், பாதியைத்தொழிலாளரும்போ

(5-ம் பக்கம் பார்க்க)

# நாளொன்றுக்கு ரூ.5000 திருடர் உழைக்கின்றனர்!

கொழும்பு, செவ்வாய்

இலங்கையில் நாளொன்றுக்கு சராசரி ரூபா 5,000 வரையிலான பொருள்கள் களவாடப்படுவதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மதிப்பீட்டில் பிக்பாக்கெட், பணமோசடி செய்வது, ஏமாற்றுதல் ஆகியவகையில் இழக்கப்படும் பொருள்கள் இடம்பெறவில்லை.

திருடர்கள், வழிப் பறிக் கொள்ளைக்காரர்கள், வீடு புகுந்து களவாடுபவர்கள் ஆகியோரிடம் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து வாழும் பிரஜைகள் வருடமொன்றுக்கு ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைப் பறிகொடுத்துவிடுகின்றனர் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இவ்விதம் பறிபோன பொருள்களில் மூன்றில் ஒரு பகுதியையே பொலிஸார் மீட்டுள்ளனர்.

**சைக்கிள் திருடர்**

இலங்கை முழுவதும் ஒவ்வொரு வருடமும் 973 கொள்ளைகளும் 4148 திருட்டுக்களும் இடம்பெறுகின்றன. இவ்விதம் பறிபோகும் பொருள்களின் மதிப்பு ரூபா 20 ஆயிரத்துக்கு மேல் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

வருடமொன்றுக்கு 1375 சைக்கிள்கள் களவாடப்படுகின்றன. 1000 கால்நடைகள் திருடப்படுகின்றன.

நடுத்தர வகுப்பினருக்குக் குறைந்த வகுப்பினரிடம் விவசாயிகளும்தான் இவ்வித திருட்டுக்களுக்கு அதிகம் இலக்காகி பொருளை இழக்கின்றனர் எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். திட்டமிட்ட திருடர் கோஷ்டி இவர்களது சைக்கிள்களையும் கால்நடைகளையும் அதிகமாகக் களவாடிச் சென்றுவிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1961-ம் ஆண்டில் கண்டியில் ரூ 24,000 பெறுமதியான தபால்பை திருடப்பட்டது திருடர்களின் கைவேலைகளில் பெரிய முயற்சி.

# காதல் பலவிதம்

## இருவர் தற்கொலை

குருநாகலை, செவ்.

விவாகமான ஒருவர் திருமணமான வேறு ஒரு பெண்ணுடன் 'காதல் தொடர்பு' கொண்டு, பின்னர் இருவரும் நச்சுத்திரவகம் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்ட ஓர் சம்பவம் இங்கு நடந்துள்ளது.

கே. கிரிமுதியன்சி (28வயது) எம். எம். அஜிநோனு (27வயது) ஆகிய இருவரின் மரணம் குறித்து நடைபெற்ற மரண விசாரணையின் போது, கிரிமுதியன்சி எழுதிய சில கடிதங்கள் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஜோர்ஜ் ஜயசிங்காவிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

கிரிமுதியன்சி எழுதிய கடிதத்தில், தமக்கும் அஜிநோரனுவுக்கும் நீண்டகாலமாக 'காதல்' ஏற்பட்டதென்றும், அஜிநோனு திருமணமானபின்னர், தாமும் வேறு ஒருவரைத் திருமணம் செய்தபின்னர் தான் அஜிநோனுமீது அளவு மீறிய அன்பு ஏற்பட்டதென்றும் தெரிவித்துள்ளார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# "நாட்டின் குழப்ப நிலைக்கு சமசமாஜ கட்சியும் காரணம்"

—திரு. டட்லி

இரத்தினபுரி, செவ்வாய்

"இந்த நாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் குழப்பத்துக்கு லங்கா சமசமாஜ கட்சியும் காரணமாகும்." என்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; காலம்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு எதிரியாக விருந்த டாக்டர் என். எம். பெரேரா திருமதி பண்டாரநாயக்காவுடன் நெருங்கிய நண்பராக விருக்கிறார் என்றும் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுடன் டாக்டர் என். எம். பெரேரா நெருங்கிய நண்பராகவிருந்து, கடந்த பொதுத் தேர்தலில் ஆதரவு அளித்தாரென்றும் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "கடந்த பொதுத் தேர்தலில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற ஆதரவு அளித்த டாக்டர் என். எம். பெரேரா இப்பொழுது, அரசாங்கத்தை எதிர்க்கின்றார். இந்த அரசாங்கத்தையும் டாக்டர் என். எம். பெரேரா எவ்வளவு காலத்துக்கு எதிர்ப்பார் என்பது என்னல் சொல்லமுடியாது. இதே கேள்வியை அவரிடம் கேட்டால் கூட அவர் பதில் சொல்ல மாட்டார்.

காற்று இப்பொழுது எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை மக்கள் நன்கு உணர்ந்துகொண்டார்கள். அண்மையில் நடைபெற்ற ஸ்தலஸ்தாபன தேர்தல்கள்மூலம், மக்கள் கண்திறந்துவிட்டார்கள் என்பதைக் காணக்கூடியதாக விருக்கிறது. ஐக்கியதேசியக் கட்சியின் கீழ் இந்த நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டுவரும் நாளை மக்கள் எதிர் நோக்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

மந்திரிகள் இப்பொழுது கனவுகாண்பதுபோல; திட்டங்களைப் போடுவதன்மூலமும் கரன்ஸி நோட்டுகளை அச்சடிப்பதன்மூலமும் இந்த நாட்டின் பொருளாதார நிலைமையைத் திருத்தமுடியாது."

# 'நகரசபை எல்லைவிஸ்தரிப்பை தேர்தலின் பின்னர் நடத்துக!'

## திருமலை வரியிறுப்போர் சங்க கோரிக்கை

திருமலை, செவ்வாய்

"நகரசபை எல்லையை விஸ்தரிக்கும் முயற்சியையோ அல்லது வட்டாரங்களைப் பிரிக்கும் முயற்சியையோ இவ்வாண்டு இறுதியில் நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தலின் பின்பே நடத்த வேண்டுமென்று உள்ளூராட்சி ஆணையாளரையும் உள்ளூராட்சி மந்திரியையும் கேட்டுக் கொள்கிறோம்."

திருக்கோணமலை எம். பி. திரு. ந. இ. இராஜவரோதயம் தலைமையில் சிவன்கோவில் வீதியில் நடைபெற்ற திருமலை வரியிறுப்பாளர் சங்கக்கூட்டத்தில் மேற்கூறும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

கூட்டத்தில் நிறைவேறிய மற்றுமோர் தீர்மானம் வருமாறு: இறைவரிப்பணம் செலுத்தாதவர்களின் பொருள்களை விற்பனை செய்வதாக திருமலை நகரசபைத் தலைவர் அறிவித்துள்ளார். ஒரே முறையில் பணம் செலுத்துவது கஷ்டமென்பதால் தவணை முறையில் பணம் செலுத்துவதற்கு வழி செய்யும்படியும் இது சம்பந்தமாக எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை ஒத்திவைக்கும்படியும் இச்சங்கம் கேட்டுக கொள்கிறது.

முன்னுள் நகரசபைத் தலைவரும் தற்போதைய நாலாம் வட்டார உறுப்பினருமான திரு. பா. நேமிநாதன் கூட்டத்தில் பேசுகையில், நகரசபைக்கான வரிகளை உடனுக்குடன் வரியிறுப்பாளர்கள் கட்ட வேண்டுமென்றும், ஆனல் செலுத்தப்பட்ட வரிகளை மீண்டும் கட்டும்படி வரியிறுப்பாளர்களைக் கஷ்டப்படுத்துவது தளர்த்தப்பட வேண்டுமென்றும் கூறினர்.

## துண்டுப்பிரசுரம் விநியோகித்ததாக வழக்கு

யாழ்ப்பாணம், செவ்வாய்

அவசரகாலச் சட்டத்தின் 35-வது பிரிவின் முதலாவது விதிக்கு மாருக 1961-ம் ஆண்டு மே மாதம் 5-ந் திகதி கருகம்பனையைச் சேர்ந்த கந்தையா பிள்ளை உமாபதிசிவம் என்பவர் பொதுமக்கள் மத்தியில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்ததாக யாழ்ப்பாணம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மேலதிக மாஜிஸ்டிரேட் திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ள பட்டபோது மாஜிஸ்டிரேட் மேல் விசாரணையை அடுத்தமாதம் 15-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

# கட்டைவேலி கி. ச. தேர்தல்

## 5-ந் திகதி நியமன தினம்

உடுப்பிட்டி, புதன்

கட்டைவேலி கிராமசபையின் பொதுத்தேர்தலுக்கான ஆயமனப் பத்திரங்கள் மார்ச் மாதம் 11-ந் திகதி வரையும் யாழ்ப்பாணம் தேர்தல் இலாகாவால் ஏற்றுக்கொள்ளப்படுமென்றும், காலை 10 மணி தொடக்கம் காலை 11 மணி வரைக்கும் 1 முதல் 12 வரையுள்ள வட்டாரங்களுக்கும் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும் 13 தொடக்கம் 25 வரையும் உள்ள வட்டாரங்களுக்குமாக நேரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும், மார்ச் 5-ந் திகதி மாத்திரம் தேர்தல் அதிகாரி கட்டைவேலி கிராமசபைக் காரியாலயத்தில் நியமனப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவாரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடற்படை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது

கொழும்பு, செவ்வாய்

கடற்படைக் கமிஷனின் விசாரணை அறிக்கை நேற்றுக் காலை கமிஷனர் திரு. கே. டி. டி' சில்வாவினல் கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கடற்படைக்குச் சொந்தமான இரு கப்பல்களில் சட்டவிரோதமாகப் பொருள்கள் இங்கு கடத்திவரப்பட்டது சம்பந்தவாக நடைபெற்ற விசாரணை அறிக்கையையே திரு சில்வா கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கை 260 பக்கங்களைக் கொண்டுள்ளது.

சுமார் இரு வருடங்கள் வரை நடைபெற்ற இந்த விசாரணையில் கடற்படை உதவி காப்டன் கொமடோர் ராஜன் கதிர்காமர் உட்பட 31 ரேயல் கடற்படை உத்தியோகஸ்தர்கள் விசாரணை செய்யப்பட்டார்கள். எல்லாமாக 50 பேர் இந்த விசாரணையில் சாட்சியமளித்துள்ளார்கள்.

—

சென்னை. பெப். 26

கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அண்மையில் விளையாட்டு விழா நடைபெற்றது. சிகிச்சை பெறுபவர்கள் அதில் கலந்து கொண்டனர்.

# 'இலங்கையர் மயக்கொள்கை வெற்றியளிக்கும்'

## வர்த்தக அமைச்சு அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்கும் கொள்கையில் இருக்கும் அவசியம் பற்றியும் இதற்கு அரசாங்கம் உதவி அளிப்பதன் அத்தியாவசியம் பற்றியும் உணவுவர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கை வர்த்தகர்கள் அரசாங்கத்தின் உதவியுடன் பொருட்களை திருப்திகரமாக விநியோகித்து வருகிறார்கள். என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்கும் கொள்கையில் சிறிது கஷ்டமேற்பட்டாலும் செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் நாட்டின் நலன் கருதி இவ்வித நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகாவால் 1,200க்கு மேற்பட்ட இலங்கையர்கள் புதிதாக இறக்குமதியாளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஜப்பான், பெல்ஜியம், போர்த்துக்கல், ஜெர்மனி ஆகிய இடங்களிலிருந்து இலங்கையர் மட்டும்தான் இறக்குமதி செய்யலாமென ஒதுக்கப்பட்டுள்ளது.

# ரூ.100அபராதமும் கோர்டு கலையும் வரைசிறையும்

## தாக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பு

மாவிட்டபுரம், செவ்வாய்

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி கிட்டினன் செல்லம்மா என்பவரை அதே ஊரைச் சேர்ந்த முத்தன் மார்க்கண்டு செல்லன் பரமு ஆகியோர் பொல்லால் தாக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்ட மாஜிஸ்டிரேட் திரு. வெஸ்லி டி. தாமோதரம் முதலாம் எதிரிக்கு 100 ரூபாய் அபராதமும் கோடு கலையும் வரை சிறைத்தண்டனையும் இரண்டாம் எதிரியை எச்சரித்து விடுதலை செய்தும் தீர்ப்பளித்தார். அபராதத் தொகையை வழக்காளியிடம் கொடுக்கும்படியும் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

எதிரிகள் சார்பில் திரு. பிறின்ஸ் இராஜேந்திராவின் அனுசரணையுடன் திரு. அ. அமிர்தலிங்கம் ஆஜராகி மாஜிஸ்டிரேட்டிடம் எதிரிகளுக்கு கருணை காட்டும்படி கேட்டுக்கொண்டார்.

வழக்காளி தரப்பில் சப் இன்ஸ்பெக்டர் திரு. தியாகராஜா உதவியுடன் திரு ஆர் ஜே செல்வரததினம் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர்.

—

## அரசாங்கத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தி செய்து கொண்ட ஒழுங்குகளை மீறினர்.

கடந்த இரு தடவைகளிலும் எமக்கு ஏற்பட்ட அனுபவம் எதிர்காலத்தில் எமக்கு உதவியாக இருக்கும். தேசியப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பிரதம மந்திரி எமது கட்சிக்கு இது வரையும் அழைப்பு அனுப்பவில்லை. இனிமேல் அழைப்பு அனுப்பினல் அந்த அழைப்பை தமிழரசுக்கட்சி பரிசீலனை செய்யும் அரசாங்கத்தின் நிலை என்ன என்பதனைத் தெளிவாகத் தெரிந்துகொண்டபின்னரே அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றி ஆலோசிப்போம். அரசாங்கத்துடன் இனிமேல் பேச்சுவார்த்தை நடத்தும்போது நமது கொள்கைகளைத் தெளிவாக அவர்களுக்குத் தெரிவிப்போம்.

திரு. இராசமாணிக்கம் வருகிற சனிக்கிழமை தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களப் பரீட்சை நடத்தப்படும்போது, பரீட்சார்த்திகளை பரீட்சை எழுத வேண்டாமென்று கோரி பரீட்சை நிலையத்தின் முன் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் மறியல் செய்யவிருப்பதாக கூறப்படுவதுபற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில், எழுதுவினைஞர் சங்கம் எமக்கு இது பற்றி எதுவிதமான அழைப்பும் அனுப்பவில்லை. அழைப்பு அனுப்பும் பட்சத்தில் அதனை ஆராய்ந்த பின்னரே நமது முடிவைத தெரிவித்துக்கொள்ளமுடியும் என்றும் கூறினர்.

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டு, அதைக் கட்டியுள்ளதாக அறிந்தேன். தோட்டக் காவலரான 'லெப்பை' கையில் எப்போதும் 'கண்டிரக் கோடி' ஒன்றை பெருமையுடன் வைத்துக்கொண்டிருக்கிறார்! இந்து முஸ்லிக்கள் அண்ணன் தம்பிபோல் சௌஜன்யமாக வசிக்கின்றனர்,

* * *

யாரும் இங்கு குடிப்பதுண்டா? என்று கேட்டேன். முன்னர் குடித்ததாயும், ஆனல் தோட்டத்துரை எம். ஆர். ஏ. என்றும், அதனல் அவருக்குப் பயந்து, குடி, புகைத்தல் எல்லாம் விட்டுவிட்டதாகவும் பலரும் சொன்னர்கள்.

அங்கு இருந்தவரில் அநேகமாக எல்லாரும் 'நாடற்றவர்'. அவர்களை நீக்கிவிட்டு சிங்களவரை அங்கு நியமிப்பதுபற்றி தோட்டத் துரையைக் கேட்டேன். 2000 அடி உயரத்துக்கு மேல் சிங்களவர் வேலைசெய்ய முடியாதென்று, தோட்டத் துரை பால்வேலி கூறினர்.

இத்தொழிலாளரை நீக்கி, வெள்ளைக்காரரையும் விரட்ட வேண்டுமென்று வெலி மடையார்கூறுகிறரல்லவா? அதைப் பற்றிப் பக்கத்திலிருந்த ஒரு சிங்களப் பிரமுகரைக் கேட்டேன். இருசாரினரும் சென்றுவிட்டால் தோட்டம் குட்டிச்சுவராகி விடுமென்று ஒப்புக்கொண்டார். ஆனல் வெலி மடையாருக்கு இதைப் பற்றி என்ன கவலை?



# மங்கையர் உலகம்

## அழகு சாதனங்கள்

—கல்யாணி—

**பெண்கள் தங்களை அழகுபடுத்துவதற்கு சுலபமான வழிகள் உண்டு. அழகுக்கு இங்கு வழி கூறுகிறுர் கல்யாணி.**

எல்லாப் பெண்களிடமும் அழகிய நிறத்தோற்றம் இருக்கின்றது. ஆனல் அத்தோற்றத்தைக் கவனமாகக் காப்பாற்றுமல் விடுவதால் அது அழிந்துவிடுகின்றது. சிலருக்கு அழகிய உடல் அமைப்பும் இயற்கையான அழகு இருந்தாலும் கவனிப்பற்றிருக்கும் அவர்களுடைய நிறத்தோற்றம் அவர்களுடைய அழகை மறைத்துவிடும். இவ்விதமாகவே அழகிய உடல் அமைப்பு இல்லாத பெண்கள்கூட தங்களுடைய நிறத்தோற்றத்தால் பிறரை கவர்ந்துவிடுகின்றனர். நிறத்தோற்றம் என்றுல் பால்போல் வெளேயாக இருப்பதல்ல. கரிக்கறுப்பாக இருப்பதும் அல்ல. பெண்களின் நிறம் பிரகாசமாக எலுமிச்சம் பழம்போல் இருக்க வேண்டும். கறுப்பாக இருந்தாலும் கவர்ச்சியளிகக்கும் பிரகாசமான தோற்றத்துடன் பெண்கள் விளங்க வேண்டும்.

பெண்களின் சருமம் சுத்தமாக இருப்பதே முதலில் அவர்களின் நிறத்தோற்றத்திற்கு உயிரூட்டுகின்றது. நாம் மூக்கினுல் மட்டுமல்ல சருமத்தினுலும் சுவாசிக்கின்றேம் என்பதை உணர வேண்டும். குளிர்நீர் பெண்களின் நிறத்தோற்றத்திற்கே உயிர்நாடியாக இருக்கின்றது. அதிகாலையில் குளிர்நீரில் நீராடுவது சிறந்தது. எண்ணெய் வடியும் சருமமுள்ள பெண்கள் வெந்நீர் பாவித்தல் கூடாது. அதிகாலையில் ஜில் என குளிர்நீர் எமது சரீரத்தில் படுவதால் இரத்தோட்டமும் அதிகரித்து சரீரத்திற்கு அழகிய ஒரு நிறத்தை ஊட்டுகின்றது.

பெண்கள் தங்களின் சருமத்தை மென்மையாக்குவதற்கும் அழகாக்குவதற்கும் பல விதமான கிரீம்களை வாங்கிப் பூசுகின்றனர் அல்லவா? இக்கிரீம்களில் சில. சில வருடங்களால் இதைப் பாவிக்கின்ற பெண்களின் முகத்தில் சுருக்கங்களை விழச் செய்து விடுகின்றது.

இந்தியப் பெண்களின் நிறத்தோற்றம் மிகவும் அழகு வாய்ந்தது. ஏன் இலங்கையில்கூட மலைநாடுகளில் உள்ள பெண்களின் நிறத்தோற்றத்தில் செழுமைவாய்ந்த ஒரு கவர்ச்சியுண்டு. இதற்குக் காரணம் சீதோஷ்ண நிலைதான். இங்கு உங்களின் சருமம் என்றும் அழகு குறையாத நிறத்தோற்றத்துடன் கவர்ச்சிகரமாக காட்சியளிக்க சிலகுறிப்புக்களைத் தருகிறேம்.

★ பால் ஆடையில் மாவாக்கிய வாதுமை கொட்டையைக் குழைத்து முகத்திலும் கழுத்திலும் பூசி இக்கலவை நன்றுகக் காய்ந்தபின் இளம் சூடுள்ள நீரினுல் கழுவி, பின் குளிர்ந்த நீரினுல் முகத்தையும் கழுத்தையும் கழுவ வேண்டும். அதன்பின் ஒருதுண்டினுல் நன்ருக நீர்போகும் வண்ணமாகத் துடைத்துவிடவும். முகத்தில் பாலாடை கலவை பூசி, கழுவியபின் பவுடர் ஒன்றும் போடாமல் சருமம் சுததமான காற்றைச் சுவாசிக்கும்படி செய்ய வேண்டும்.

★ சிறிதளவு பச்சைக் கடுகை எடுத்து அதற்களவான மஞ்சளையும் எடுத்து மாவாக்கி பாலாடையில் குழைத்து முகத்திற்கும் முடியுமானல் மற்றப் பகுதிகளுக்கும் பூசியபின் நீராடுக.

★ கடைசியில் இன்னெரு அழகு சாதனம். கடலைமா, மஞ்சள்மா, இவற்றை ஒரே அளவாக எடுதது பாலாடையில் குழைத்து முகத்தில் பூசியபின் நீராட வேண்டும். இதில் இருந்து குளிர்நீரும் பாலாடையும் சரும அழகுக்கு எவ்வளவு அவசியம் என்பது புலனுகின்றதல்லவா? சிறிது கஷ்டமெடுத்து இந்த அழகுசாதனங்களை உபயோகித்தாலும் இதனுல் பெண்கள் அடையும் பலன் அதிகம்.


# ப்ரீடம்' மார்க் கற்பூரம்




**கற்பூரம் வாங்கும்போது**

**'ப்ரீடம்' மார்க் கற்பூரம்.**

**என்றே கேட்டு வாங்குங்கள்.**

**இது ஓர் சிறந்த தயாரிப்பு**

தயாரிப்பாளர்கள்,

ப்ரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்,

மினுவாங்கொட.


# பிரதமர் எதிர்பார்க்கும் தியாகம் என்ன?

## தெலிகம கூட்டத்தில் எம். பி. பேச்சு

எட்டியாந்தோட்டை, செவ். 'சந்ததியினர் எல்லோருமே தியாகம் செய்திருககின்றுர்கள். இப்படியிருக்கையில் அரசாங்கம் இந்நாட்டு மக்களை மேலும் தியாகம்செய்யும்படி கேட்கிறது. அரசாங்கம் எதிர்பார்க்கும் மேலதிகமான தியாகம்தான் என்ன?'

தெலகம என்ற இடத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் றுவான்வெல எம். பி. திரு. பி. சி. இம்புலான பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஜோர்ஜ் கொத்தலாவெல தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில், ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தில், அமெரிக்க உதவியாக யு. என். பி. அரசாங்கம் ஒரு சதமும் பெறவில்லை யென்று கூறினர்.

காலம்சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா ஆட்சிக்காலத்திலும், சர் ஜோன் கொத்தலாவலை ஆட்சிக்காலத்திலும், அலரிமாளிகையில் ஒரு கான்ஸ்டபிள் மட்டுமே காவல் இருந்தார். ஆனல் தற்போதைய பிரதமரின் வாசஸ்தலத்தை 12 சி. ஐ. டி. அதிகாரிகளும், 38 ராணுவ வீரர்களும் காவல்புரிகின்றனர் என்றும் கூறினர். அவர் மேலும் பேசியதாவது:-

காவற்கார நாய்களுக்காக மூன்று நாய்ப்பட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாய்ப்பட்டி அமைப்பதற்கும் 12,000 ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த காவற்கார நாய்களைப் பராமரிப்பதற்கு 875 ரூபா செலவு செய்யப்படுகிறது. இந்தநாட்டு பிரதமர் தியாகம் செய்கிறுர் என்பது இதுதானு? இந்த வகையில்தானு அவர் மற்றவர்களைத் தியாகம் செய்யச்சொல்கிறுர்?

தியாகம் செய்வது, ஏழைகளிலிருந்து உயர்தர அதிகாரிகளுக்கு என்ற முறையில் ஆரம்பிக்கப்படக்கூடாது. உயர்தர அதிகாரிகளிலிருந்து ஏழைகள் என்ற முறையில் ஆரம்பிக்கப்படவேண்டும்,

1960-ம் ஆண்டு மார்ச்மாதம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை டாக்டர் என். எம். பெரேரா தாக்கிப்பேசினர். ஆனல், ஜூலை மாதத்தில் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டாக இணைந்துகொண்டார். ஐக்கிய தேசியந் கட்சியைத் தோற்கடிக்கவேண்டும் என்ற ஒரு நோக்கத்துக்காகவே அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்துகொண்டார்."

தாய்மார்களுக்கு தங்கள் குழந்தைகளுக்கு உணவு தயாரித்துக் கொடுப்பதைவிட, இனிப்புத் தேடிக் கொடுப்பதே பெரும் பிரச்னையாக இருக்கின்றது. பல இடங்களில் பாடசாலைகளுக்குச் செல்லும் குழந்தைகள் இனிப்பு வாங்குவதற்கு காசுக்காக அடம்பிடிப்பதைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருக்கும்! குழந்தையை அல்ல தாயைப் பார்ப்பதற்குத்தான். ஒவ்வொரு நாளும் குழந்தைக்குக் கொடுப்பதற்காக சில்லறை தேடித் திரியும் தாய்மார்கள் பாவம்! இப்பழக்கத்தை மேலும் வளர்ககக் கூடாது.

சமையல்பகுதி

# இனிப்புகள் பல

— சகு —

இனிப்புகள் வாங்குவதும் கஷ்டம்தான். முன்புபோல சாக்கிலேட் கிடைப்பது அருமை. இதனுல் தாய்மார்கள் சிக்கனமாக வாழ்வதற்காகவும் குழந்தைகளை நல்வழிப்படுத்துவதற் காகவும், ஏன் தாய்மார்கள் வீடுகளிலேயே இனிப்புவகைகளைச் செய்யக்கூடாது.

சில பெண்கள் பெரும் செலவுகளையிட்டுக் கவலையடைய மாட்டார்கள். ஆனல் ஒரு 5, 10 சதத்தையிட்டுப் பெரும் ஆரவாரம் செய்வார்கள். வீடுகளில் இனிப்பு செய்வதால் நஷ்டம் ஏற்பட்டுவிடாது. மிகவும் சிக்கனமாகச் செய்யக்கூடிய சில இனிப்புவகைகள்.

### பேரீச்சம்பள இனிப்பு:

இப்பொழுது பேரீச்சம்பழக் காலம் இல்லையா? மிகவும் குறைந்த விலையில் பேரீச்சம் பழங்களை வர்ங்கலாம். $1\frac{1}{2}$ ரூத்தல் பேரீச்சம்பழம் அளவில் எடுத்து ஒரு இரவு முழுவதும் தண்ணீரில ஊறவிடவும். பின் ஊறியபழத்தின் கொட்டைகளை நீக்கி பேரீச்சம்பழத்தை துண்டு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளவும். இதன் பின் ஒரு ரூத்தல் சீனியை ஒருபாத்திரத்தில் இட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். சீனி கொதித்ததும் வெட்டி வைத்த பேரீச்சம்பழத்தையும் கொட்டிக் கிளறவும். $\frac{1}{4}$ ரூத்தல் ரவையையும் கசுக்கொட்டையையும் சுத்தப்படுத்தி அடுப்பில் இருக்கும் பழத்துடன் சேர்க்கவும். ரவை, லட்டு செய்வதுபோல் பதம் வந்தவுடன் லட்டுப்போல உருண்டை உருண்டையாகப் பேரீச்சம்பழ இனிப்பை பிடித்துக் கொள்ளவும். இனிப்பு ஆறியபின் அழகாக எண்ணெய்ப் பேப்பரில் (ஓயில்பேப்பர்) சுற்றி வைத்து உங்கள் குழந்தைகளுக்குக் கொடுங்கள்.

### கச்சான் இனிப்பு:

கச்சான் அல்வா தின்று அலுத்துப் போயிருக்கும் குழந்தைகளுக்கு இதன் உருவமும் சுவையும் ஒரு மாற்றமாக இருக்கும். இனிப்பு வகைகளுக்கு நெய் பாவிப்பது கூடிய செலவானல் 'பட்டர்' அல்லது 'கோவோ' பாவிக்கலாம். கச்சான் பருப்பை எடுத்து நெய்யில் சிறிது வறுக்கவும். வறுத்த பருப்பை நெய்பூசிய ஒரு தட்டையான பாத்திரத்தில் பரவவும். பின் சீனியில் அல்லது கித்துல் பனங்கட்டியில் பாணி தயாரித்து காய்ச்சின பாணியைத் தட்டையான பாத்திரத்தில் பரயுவிள்ள கச்சான் மேல் ஒரே அளவாக ஊற்றி வாழையிலையினல்பாணி சமப்படுத்தவும். பின்னர் உங்களுக்கு வேண்டிய உருவத்தில் இனிப்பை வெட்டிக் கொள்ளுங்கள். இந்தக் கச்சான் இனிப்புப் பார்ப்பதற்கு மேலே அதிக கச்சானும் கீழே ஒரே மட்டமாகப் பாணியும் இருக்கும்.

### மில்க் டொபி:

மில்க்டொபி செய்யத் தெரியாதவர்கள் மிகவும் சிலரே. அதிகமாக சிறிய பிள்ளைகள் கூட 1 ரூத்தல் சீனியையும் டின்பால் ஒன்றையும் கலந்து மில்க்டொபி செய்துவிடுவார்கள். இந்த இனிப்பை இன்னும் சுவையாகச் செய்யத் தாய்மார்கள் இந்த முறையை கடைப்பிடிக்கலாம். மில்க் டொபி செய்யும்பொழுது சிறிது கொக்கோவையும் ஒரு மேசைக்கரண்டி பட்டரையும் சேர்த்தால் சுவை அதிகமாக இருக்கும். கசுக்கொட்டை, முந்திரியவற்றல் சேர்ப்பது கூட நன்று. முந்திரியவற்றல் இனிப்பை இறக்கும் சமயத்தில்தான் போடவேண்டும்.

### உருளைக்கிழங்கு இனிப்பு:

முதலில் ஒரு ரூத்தல்சீனியை நன்ருகக் காய்ச்சி பாணிசிறிது தடிப்பானவுடன் பாணியை அடுப்பிலிருந்து இறக்கி ஆற வைக்க வேண்டும். சீனி ஆறும் சமயத்தில் முதலில் அவித்து வைத்த ஒரு ரூத்தல் உருளைக்கிழங்கினதும் தோலை நீக்க வேண்டும். பின் அக்கிழங்குகளை நறுக்கி இடியப்பஉரலில் இட்டு பிளியவும். பிளிந்த கிழங்கை சிறிது சிறிதாக சீனிப்பாணியில் இட்டு நன்குகக்கட்டிபடாமல் கலக்கவும். இப்படியாக எல்லாக் கிழங்கையும் பாணியில் சேர்த்த பின், பாணி தடித்த பாகுவாகிவிடும். இதை அடுப்பில் வைத்து சிறிது காய்ச்சியதும் இறுகிவிடும். உடனே 1 கரண்டி பட்டரையும் கசுக்கொட்டையையும் போட்டு எண்ணை பூசிய தட்டில் இனிப்பைப் பரவி சமப்படுத்தி சூட்டுடனே துண்டுதுண்டாக வெட்டவும் இந்த முறையாகச் செய்யும் உருளைக்கிழங்கு இனிப்பு கண்ணடித் துண்டுகள் போல வெண்மையாகப் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். சுவையாகவும் இருக்கும்.

—

## "சமூகமணி" பட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய் கரணவாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் உடுப்பிட்டி கிராமசபை உப தலைவரும், சமாதான நீதிபதியுமான திரு. யோகலிங்கத்திற்கு 'சமூகமணி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்க விருக்கிறது. இப் பாராட்டுவிழா மார்ச் 15-ம் திகதி நடைபெறுமெனவும், இவ் விழாவிற்கு இலங்கையிலுள்ள இந்திய உதவி ஹைமிஷனர் தலைமை வகிப்பார் எனவும் தெரிகிறது.

# எங்கள் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது?

## வட்டார விஸ்தரிப்பு பற்றி பிரதமருக்கு பாஷையூர் மக்கள் மகஜர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாநகரசபை 17 வட்டாரங்களாகப் பிரிக்கப்படுவது சம்பந்தமாக பாஷையூர் வாக்காளர்கள் பிரதமருக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளனர். இம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

பாஷையூர் பொதுமக்களாகிய நாம், உள்ளூராட்சி அமைச்சர் எங்கள் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ். மாநகர சபைக்கு உறுப்பினராவதற்கு வசதி செய்ததை வரவேற்கும் அதே நேரத்தில் யாழ். மாநகரசபை வட்டாரங்களைப் புதிதாய் அமைப்பது பற்றி விசாரணை நடத்திய அதிகாரிக்கு எங்கள் மக்கள் பாஷையூர் வட்டாரம் எப்படிப் பிரிக்கப்படவேண்டுமென்று சொன்னவற்றை முழுமையாக நிராகரித்து எமது சமூகமார்க்கவிஷயங்களை அல்லோலகல்லோலப்படுத்துவதற்குரிய விதமாய் ஒரு தொற்றுநோய்ச் சமூகம் போன்று மற்றைய சமூகத்திடமிருந்து புறம்பே ஒதுக்கக்கூடிய திட்டத்தை எங்கள் விருப்பத்திற்கு முழு மாருய் திணிப்பதனையிட்டு, எங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிப்பதோடு எங்கள் மக்கள் கேட்டபடி பழைய பூங்கா வீதி, ஈச்சமோட்டைவீதி, புங்கன்குளம் ரோட், புதிய அனுதை வீதி, சுவாமியார் வீதி ஆகியவை எல்லையாகக் கொண்ட ஒரு வட்டரேத்தைப் பிரித்துத் தரும்படியும், அவ்வட்டாரத்திற்கு அர்ச். அந்தோனியார் வட்டாரம் என்ற பெயரை இடும்படியும், கௌரவ பிரதம மந்திரியையும், மந்திரிசபை உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

பாஷையூர் பொதுமக்களாகிய நாம் யாழ். மாநகரசபை அதன் எல்லைக்குள்ளிருக்கும் சகல கடலோர மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடிய விதத்தில், பாஷையூர் நாவாந்துறை மககளுககு ஒவ்வொரு வசதியான வட்டாரமும் நாலாயிரம் வாக்காளர்களுக்கு அதிகமாக உள்ள குருநகருக்கு இரண்டு வட்டாரங்களாக அமைக்கக்கூடிய விதத்தில் சமர்ப்பித்த திட்டத்தை உள்ளூராட்சி அமைச்சர் நிராகரித்ததையிட்டு எங்கள் வருத்தத்தைத் தெரிவிப்பதோடு, மீண்டும் அத்திட்டத்தை புனர் ஆலோசனை செய்து அதை உடனடியாக அமுல் நடத்துமாறு பிரதம மந்திரியையும் மந்திரிசபை உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இத்தீர்மானங்கள் இரண்டும் பாஷையூர் கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற வட்டாரப்பிரிவினை எதிர்ப்பு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்களைக் கொண்ட மகஜரில் சுமார் ஆயிரம் வாககாளர்கள் கைச்சாத்திட்டிருப்பதாகத் தெரிகிறது.

## காட்டுக்குள் எலும்புக்கூடு

நக்குவானை, திங்கள்

நக்குவானைக்கும் புளுதோட்டவுக்கும் இடையிலுள்ள ஒரு காட்டுக்குள், ஒரு மனித எலும்புக்கூடு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்த எலும்புக்கூடு துண்டுகளாகவிருந்ததினுல், இது ஒரு ஆணுடையதா அல்லது பெண்ணுடையதா என்பது இன்னும் கண்டுபிடிககப்படவில்லை.

இந்த எலும்புக் கூடு ஆறு மாதமுடையதென நம்பப்படுகிறது.

## சிங்கள பட்டதாரிகள் கட்டாய சேவை

கொழும்பு, திங்கள்

சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றுள்ள விஞ்ஞான பட்டதாரிகள் கட்டாயமாக அரசாங்க சேவையில் கடமையாற்றவேண்டுமெனும் விதியை அமுல் நடத்த கல்வி அமைச்சு ஆலோசனை செய்து வருகிறது.

இதன் பிரகாரம் அரசாங்கத்தின் கீழ் சேவை செய்ய மறுக்கும் எந்த பட்டதாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசாங்கத்துககு உரிமை இருக்கும். இவ்விதம் மறுப்பவர் அரசாங்கத்தின் கீழ் சேவை செய்யாத காலம் வரை நாளொன்றுக்கு ரூ. 150க்கு அதிகரிக்காத வகையில் அபராதம் செலுத்த வேண்டி நேரிடும்.

சிங்கள விஞ்ஞான பட்டதாரிகள் பற்ருக்குறை பெரிதும் இருப்பதாக கல்வி அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வர்த்தகரின் தீரச்செயல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

குளமொன்றில் மூழ்கவிருந்த ஐந்து சிறுவர்கள், ஒரு வர்த்தகரின் தீரச் செயலினுல் காப்பாற்றப்பட்ட சம்பவமொன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை, யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியிலுள்ள பெரிய குளத்தில் ஆறு முஸ்லிம் சிறுவர்கள் நீராடச் சென்றனர். இவர்களில் ஐவர் ஒருமித்து கைகளைக் கோர்த்தபடி குளத்தில் பாய்ந்தனர். மூன்று நான்கு நிமிடங்களாகியும், இச் சிறுவர்கள் மேலே வராததைக் கண்டு பயந்து ஆருவது சிறுவன் கூக்குரலிட்டான். குளத்தில் நீராடிவிட்டு அப்பொழுது புறப்பட்டுக்கொண்டிருந்த வர்த்தகர் ஜனுப் எம். சுல்தான் அப்துல் காதர் சிறுவன் கூக்குரல் கேட்டு ஓடினுர்

அப்துல்காதர் குளத்தில் பாய்ந்து சிறுவர்களைக் காப்பாற்ற முயற்சிக்கையில், ஒரு சிறுவன் இவரின் கால்களை இறுகப் பிடித்துக்கொண்டான். உதவி செய்யப் போனவருக்கே ஆபத்து வந்துவிட்டது! ஜனுப் சுல்தான் அப்துல்காதர் தனது தைரியத்தால், ஒவ்வொருவராக ஐந்து பேரையும் கரைசேர்த்து, முதல் சிகிச்சையும் அளித்தார். சிறுவர்கள் மூழ்கியிருந்த குளத்தில் 10 அடி தண்ணீர் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## கோப்பாய் கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் கிராமசங்க மூன்ரும் வட்டார தேர்தல் கடந்த சனிக்கிழமை நடந்தபோது கனகர் நாகலிங்கம் 95 அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுள்ளார் வெற்றிவேலு சுப்பிரமணியம் என்பவருக்கு இரண்டு வாக்குகள் மட்டுமே கிடைத்தது.

கனகர் நாகலிங்கத்திற்கு 231 வாக்குகளும், பொன்னையா சுந்தரலிங்கத்திற்கு 136 வாக்குகளும், முருகன் சாமிநாதனுக்கு 111 வாக்குகளும், இளையதம்பி இராசலிங்கத்திற்கு 52 வாக்குகளும் கிடைத்தன.

## வானெலி நிகழ்ச்சிகள்

### புதன் 27-2-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைப் படஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 வேலுப்பிள்ளை சிவஞானம் — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 உங்கள் பிரச்னை, 9-45 குரல்வகை, 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 1-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு. 7-05 வாத்திய சங்கீதம், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திச் குறிப்புகள், 7-35 மணித்திருநாடு (சென்னை அஞ்சல்)

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திஇசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்தி அரங்கம் (சென்னை அஞ்சல்), 7-45 'வாடாத அல்லி' — நாடகம், 8-00 என்தநாளும் காப்போம் (சென்னை அஞ்சல்), 8-10 ஜே. எம். அதுல்சனி-ஸிதார், 9-15 நல்லுரை, 9-20 பொன்னெளிர் பாரதம் - இசை நிகழ்ச்சி, 9-45 இடைவேளை, 9-50 இசைமாலை.

## சனசமூகநிலைய நிர்வாகிகள்

கொக்குவில், செவ்வாய்

கொக்குவில் சனசமூக நிலையத்தின் வருடாந்தக்கூட்டம் சென்ற சனிக்கிழமை மாலை 7 மணியளவில் நிலைய மண்டபத்தில் திரு க. த. இராசா தலைமையில் நடைபெற்றது. பு வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. ச. இரத்தினசபாபதி, தலைவர்: திரு. க. த. இராசா, உபதலைவர்: திரு. க. சிவகாருண்யம், செயலாளர்: திரு. சி. சத்தியானந்தராசா, துணைச்செயலாளர்: திரு. ஞா. ஜெயரத்தினம், பொருளாளர்: திரு. பொ. த. இராசா, நிலையப் பொறுப்பாளர்: திரு. சி. பரமானந்தராசா, விளையாட்டுப் பகுதித் தலைவர்: திரு. ஞா. ஜெயரத்தினம், கணக்குப் பரிசோதகர்: திரு. பொ. தம்பி.

பின் வருவோர் நிருவாகக் குழு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள்: வ. நாகலிங்கம், கூ. கனகரத்தினம், ச. பொன்னுத்துரை, வ. முத்துலிங்கம், வி. சண்முகநாதன், சு. தருமசிங்கம், நா விஜயநாதன்.

## நாடகவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அடுத்த மாத இறுதியில் நாடகவிழா வொவரு நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவை மகாஜனக் கல்லூரி நுண்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

# "நாட்டை வளப்படுத்தும் பொறுப்பு ஆசிரியர்களுடையது"

## திரு வீரசிங்கம் கருத்து

மானிப்பாய், திங்கள்

"ஆசிரியர்களை மதித்துப் போற்றுநாடு ஒருபோதும் முன்னேறமுடியாது. ஆசிரியர்களாற்ருன் ஒரு நாட்டை வளப்படுத்தமுடியும். இந்த உண்மையை நன்குணர்ந்து பொது மக்கள் ஆசிரியர்களைப் போற்றிக் கௌரவித்து நடக்கவேண்டும். அதேவேளையில் ஆசிரியர்களும் தங்கள துகண்ணியத்தை இழக்காது காப்பாற்றிக் கொள்ளவேண்டும்."

இவ்வாறு வட்டுக்கோட்டை முன்னைநாள் எம். பி. திரு. வி. வீரசிங்கம்மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் திரு. எல். வ. யோசேப்புக்கு மானிப்பாய் மக்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்தின் போது பேசுகையில் குறிப்பிட்டார். டாக்டர் ஜே. எஸ். நவரத்தினம் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. வீரசிங்கம் மேலும் பேசுகையில், ஆசிரியர்கள் தமது கடமையினை உணர்ந்து செயலாற்றவேண்டுமென்றும், இந்நாட்டின் கல்வி வளர்ச்சி தங்கள் பொறுப்பில் உள்ளதென்பதைஉணர்ந்து பொது மக்களின் ஒத்துழைப்புடன் இயன்றவரை பணிபுரிய முன்வரவேண்டுமென்றும் கூறினுர்.

ஆசிரியர் திரு நாவேந்தன் பேசுகையில் பாடசாலைகளின் வளர்ச்சியினைப் பேணும்பொறுப்பு இன்று பெற்ரோர்களின் கையில்தான் இருக்கின்றதென்றும், அவர்கள் மிக்க விழிப்புடனிருத்தல் அவசியமென்றும் கூறினுர். திரு. லோறன்ஸ் பொதுமக்கள் சார்பில் பிரிவுபசாரப்பத்திரத்தை வாசித்து வழங்கினுர். ஆசிரியர் திரு. சம்பந்தர் உட்படப் பலர் பாராட்டுரைகள் கூறினர். ஈற்றில் திரு. யோசேப் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்குநன்றி தெரிவித்துப் பேசினுர். கூட்ட ஆரம்பத்தில் திரு யோசேப்பும் பாரியாரும் மேளவாத்திய சகிதம் மெமோறியல் கல்லூரி வாசலிலிருந்து மருதடிப்பிள்ளையார் கோவில் வீதிக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

## யுனைடெட் லையன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுண்டிக்குளி யுனைடெட் லையன்ஸ் கோஷ்டிக்கும் கொழும்புத்துறை வை. எம். எச். ஏ. கோஷ்டிக்குமிடையே நடந்த சிநேகபூர்வமான கிரிக்கெட்போட்டியில் யுனைடெட் லையன்ஸ் ஒரு இன்னிங்சினுல் வெற்றி பெற்றது. யுனைடெட் லையன்சைச் சேர்ந்த க. நந்தகுமார் இரண்டாவது ஆட்டத்தில் எட்டு ஓட்டங்கள் கொடுத்து எட்டு விக்கட்டுகளை கைப்பற்றினுர். போட்டி வை. எம். எச். ஏ. மைதானத்தில் நடைபெற்றது.

## உரும்பராய்க்கு வெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். விநோபாஜி இளந்தாரகைக் கோஷ்டிக்கும், உரும்பராய்க் கோஷ்டிக்கும் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஒரு சிநேகபூர்வமான கிரிக்கட் விளையாட்டுப் போட்டி உரும்பராய் மைதானத்தில் நடைபெற்றது.

விநோபாஜிக் கோஷ்டி தனது ஆட்டங்களில் முறையே 50, 48 ரன்களைப் பெற்றது. இக் கோஷ்டியைச் சேர்ந்த சிவலிங்கம் 14 ரன்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர். உரும்பராய் கோஷ்டி தனது ஆட்டங்களில் 69, 49 ரன்களைப் பெற்று, 20 ரன்களால் விநோபாஜி இளந்தாரகைக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

## விளையாட்டுப் போட்டி

மாவிட்டபுரம், செவ்வாய்

வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் விளையாட்டுப் போட்டியும் பொதுக்கூட்டமும் இன்று சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. இவ விழாவிற்கு திரு. எஸ். மாணிக்கவாசகர் தலைமை வகிப்பார்.

## நல்லூர் நடைபஜனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

சிவராத்திரி தினத்தன்று இரவு ஒன்பதரை மணியளவில் நல்லூர் தேவஸ்தான வாசலில் சுமார் 400 அடியார்கள் திரு சி கந்தசுவாமி தலைமையில் கீரிமலைக்கு நடைபஜனையாகப் புறப்பட ஆயத்தப்பட்டபொழுது அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சமயப் பிரசார சபையின் உப தலைவர் திரு. பொன் அப்புக்குட்டி, அக் கோஷ்டியின் தலைவருக்கு மலர்மாலை சூட்டினுர். அப்பொழுது அவர் பேசுகையில இவ்விதமான பஜனைக் கோஷ்டியை ஏற்படுத்திச் சமய வளர்ச்சியை உண்டாக்குபவர்களை பாராட்ட வேண்டுமென்றும், இப் புண்ணிய தினமாகிய சிவராத்திரியில் சிவநாமஞ்சொல்லி நடந்து கீரிமலை செல்லல் நித்திரை விழித்தற்கு நன் முயற்சியென்றும், அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க சமயப்பிரசார சபை இவ்வித பணிசெய்பவர்களைக் கௌரவிக்குமெனவும் கூறிச் சபையின் சார்பாக நன்றி தெரிவித்தார்.

செயலாளர் திரு. த. இராசரத்தினம் அக் கோஷ்டியிற் பங்குபற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்து வழியனுப்பினுர்.

## கிராமசபை தேர்தல்கள்

யாழ்ப்பாணம், புதன்

வடமாகாணத்தில் உள்ள 4 கிராமசபைகளின் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் அடுத்த மாதம் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

முள்ளிபபத்து கிராமசபை 8 வட்டாரங்களுக்குமான நியமனப்பத்திரங்கள் அடுத்தமாதம் 7-ம் திகதியும், அச்சுவேலி கிராமசபையின் 14 வட்டாரங்களுக்குமான நியமனப்பத்திரங்கள் 8-ம் திகதியும், கட்டைவேலி கிராமசபை 25 வட்டாரம், உடுப்பிட்டி கிராமசபை 24 வட்டாரம் என்பனவற்றுக்கான நியமனப்பத்திரம் 11-ம், 12-ம் திகதிகளும் ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றது.

கட்டைவேலி, உடுப்பிட்டிக் கிராமசபைப் பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் போட்டியிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உடுப்பிட்டி, பருத்தித் துறைத் தொகுதிகளில் உள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் கட்சி ஆதரவாளர்கள் போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

## யார் இவர்?

பருத்தித்துறை, திங்கள்

மருதங்கேணியைச் சேர்ந்த ஆழியவழை ஆகளியாற்றில் காணப்பட்ட பிரேதத்தின் பரிசோதனையை பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அதிகாரி நடாத்தினுர். இப்பிரேதம் ஒரு ஆணுடையதென்றும் இறந்தவர் முபபதுக்கும் நாற்பதுக்கும் இடையபட்ட வயதினராக இருக்கலாம் எனவும் பிரேத பரிசோதனையின் பின் தெரிவிக்கப்பட்டது.

# மந்திரிகூட்டும் உயர்தர மகாநாடு

## கல்விக்கொள்கை பற்றிஆராயும்

கொழும்பு, செவ்வாய்

உயர்தர மூன்று நாள் மகாநாடு ஒன்று அடுத்தவார ஆரம்பத்தில் கல்விமந்திரி திரு பதியுதீன் மஹ்மூத் தலைமையில் நடைபெறும். இம்மகாநாட்டை கல்விமந்திரி கூட்டுகிறார். கல்வி அமைச்சின் அதிகாரிகள், கல்விஇலாகா அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளும் இந்த மகாநாட்டில் தேசிய கல்விக் கமிஷன் சிபார்சின் அடிப்படையில் உருவான நாட்டின் கல்விக் கொள்கை சம்பந்தமாக முடிவு செய்யப்படும் எனத் தெரிய வருகிறது.

கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் இதுசம்பந்தமாக தெரிவிக்கையில் 1960-ம் ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முக்கிய மகாநாடு இது என்று கூறினர்.

இந்த மகாநாட்டில் முடிவு செய்யப்படும் தீர்மானங்கள் அங்கீகாரம் பெறும்பொருட்டு அரசாங்கத்திடம் சமர்ப்பிககப்படும்.

இந்த உயாதர மகாநாடு இம்மாதம் 12-ம் திகதி முதல் 14-ம் திகதிவரை நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அடுத்த வார ஆரம்பத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் கவனிக்கப்படும்.

1. தனிப்பட்ட பாடசாலைகளின் எதிர்காலம்.
2. தோட்டப்பாடசாலைகள்.
3. கல்வியில் சமசந்தர்ப்பம்.
4. பாடசாலைகளின் அனுமதி இடவசதி.
5. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

---

## $41\frac{1}{2}$ லட்சம் பேருக்கு மதிய உணவு

புதுடில்லி, பெப். 26

இந்தியாவில் 41,50,000 பாடசாலைக் குழந்தைகளுக்கு அமெரிக்க "கெயர்" ஸ்தாபனம் மதிய உணவு வழங்கி வருகிறது. அடுத்த ஆண்டு பாடசாலைக் குழந்தைகளின் எண்ணிக்கை மேலும் 5 லட்சம் அதிகரிக்கும். கடந்த 12 ஆண்டுகளாகவே "கெயர்" ஸ்தாபனம் மதிய உணவு வழங்கிவருகிறது.


3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) வெம்பிளி (கண்டி)

மொடர்ன் (பதுளை)

மற்றும் 3 திரைகளில்!



சிவாஜி கணேசன், பத்மினி, ராகினி, தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன், பி.கண்ணும்பா, சுந்தரிபாய், எம். ஆர். சந்தானம், பக்கிரிசாமி, புளிமூட்டை ராமசாமி, காலஞ்சென்ற சாயிராம் மற்றும் பலர் நடித்த

புனர்ஜென்மம்

பின்னணி: சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ராஜா, திருச்சி லோகநாதன், ஜிக்கி, சுசீலா, ஜானகி, சரஸ்வதி

திரைக்கதை-வசனம் ஸ்ரீதர் | டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி | இசை டி.சலபதிரராவ்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

அஞ்சலி - ராமராவ் நடித்த

பாலநாகம்மா

மனோகரா (யாழ்ப்பாணம்)

நாகேஸ்வரராவ் - அஞ்சலிதேவி நடித்த

அனார்கலி


டாக்டர்கள், வழக்கறிஞர்கள் கிரிக்கெட் போட்டி

# வெற்றி தோல்வியின்றி 'முடிவடைந்தது

## வழக்கறிஞர் கோஷ்டியை நேரசந்தர்ப்பம் காப்பாற்றியது

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடபகுதி வழக்கறிஞர்களுக்கும் டாக்டர்களுக்கும் இடையில் நடைபெற்ற வருடாந்த கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. வழக்கறிஞர்கள் முதலாவது ஆட்டத்தில் எல்லோரும் 'அவுட்'டாகி 79 ரன்களும், இரண்டாவது ஆட்டத்தில் 7 பேர்கள் 'அவுட்'டாகி 99 ரன்களும் பெற்றனர். டாக்டர்கள் கோஷ்டியினர் முதலாவது ஆட்டத்தில் 201 ரன்கள் பெற்று 7 பேர் 'அவுட்'டானர்கள். மாலை ஆறுமணிக்கே ஆட்டம் முடியவேண்டியிருந்ததால் வழக்கறிஞர்கள் தமது சாயம் வெளுருத அளவுக்கு பாதுகாக்கப்பட்டார்கள் எனலாம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை டாக்டர்கள் கோஷ்டிக்கும், வழக்கறிஞர்கள் கோஷ்டிக்குமிடையே 'கிரிக்கெட்' போட்டி நடந்தது.

கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பதற்கா, டாக்டர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள் உட்பட பெருந்திரளான மக்கள் மைதானத்தின் நாலு பக்கங்களிலும் திரண்டிருந்தார்கள். முதலாவதாக வழக்கறிஞர் கோஷ்டி திரு. எஸ் என். இராசதுரை தலைமையில்விளையாட்டைஆரமபித்தது வழக்கறிஞர் கோஷ்டியில் திருவாளர்கள் என். இராசநாயகம், ஜே. ஜ. ராஜரத்தினம், பி. சோமதிலகம், எஸ். யோகநாதன், என். விஜயநாதன், ஏ ரி. துரையப்பா, வீ. நாகராசா, கே. சேனாதிராசா, எஸ். மகாதேவா, எஸ். அம்பலவாணர் ஆகியோர் விளையாடினர்.

அம்பலவாணர் 17 ரன்கள் எடுத்து அவுட்டாகாமலிருந்தார். வழக்கறிஞர் கோஷ்டியின் தலைவர் எஸ்.என்.இராசதுரை, துரிதமாகவும் உற்சாகமாகவும் விளையாடினர். ஏ. ரி. துரையப்பா, பி. சோமதிலகம், எஸ். யோகநாதன் ஆகியோரும்சுறுசுறுப்பாக விளையாடினர்கள். முதலாவது ஆட்டத்தில் வழக்கறிஞர் கோஷ்டி 79 ரன்கள் எடுத்தது.

டாக்டர்கள் கோஷ்டி விளையாட்டை ஆரம்பிப்பதற்காக மைதானத்தில் பிரவேசித்த போது, ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டனர். டாக்டர் இரத்னேசர் மிகவும்திறமையாகவிளையாடினர்.

டாக்டர் மயில்வாகனம் மிகவும் திறமையாக விளையாடினர். 100 ரன்கள் எடுத்துவிடுவார் என்று அநேகர் எதிர்பார்த்தார்கள். ஆனல் டாக்டர் மயில்வாகனம் 80 ரண்களுடன் அவுட்டாகும்படி நேர்ந்துவிட்டது. டாக்டர் மயில்வாகனம், மேல்நோக்கி அடித்த பந்தை, பின்னுக்கு நின்ற ஜிம்மி ராஜரத்தினம், மிகத் திறமையாகக் கைப்பற்றி டாக்டரை அவுட்டாக்கினர்.

அல்பிரட் துரையப்பா மிகவும் திறமையாக பந்து எறிந்து அடுத்தடுத்து இருவரை அவுட்டாக்கினர். தனியாக 46 ரன்கள் எடுத்த டாக்டர் ரட்னேசரையும், டாக்டர் செல்வராசாவையும், துரையப்பா அவுட்டாக்கினர். டாக்டர்கள் கோஷ்டி, டாக்டர் மயில்வாகனம் தலைமையில், திருவாளர்கள் அருள்பிரகாசம், செல்லத்துரை, ராஜகருணை, ரட்னேசர், செல்வராசா ஜோசெப், ஹன்றி, வாலுப்பிள்ளை ஆகியோர் விளையாடினர்கள். டாக்டர்கள் கோஷ்டி 7 விக்கெட்டுக்கு 201 ரன்கள் எடுத்து முதல் ஆட்டத்தில் வெற்றியீட்டினர்கள். டாக்டர் ஜோசெப் தனியாக 21 ரன்கள் எடுத்ததோடு பலதடவை உயரமாக அடித்தார். டாக்டர்ஹன்றி, டாக்டர் வாலுப்பிள்ளை ஆகியோர் கடைசிவரை ஆட்டமிழக்காமல் விளையாடினர்கள். டாக்டர் கோஷ்டித் தலைவர் மயில்வாகனம் விரும்பியதால், முதல் ஆட்டம் பாதியில் நிறுத்தபபட்டது.

வழக்கறிஞர்கள் கோஷ்டியினர் தமது இரண்டாவது ஆட்டத்தில் 99 ரன்கள் பெற்று 7 பேர்கள் அவுட்டாகினர். இந்த 99 ரன்களிலும்75 ரன்களை திரு. ஜிம்மி ராசரத்தினமே தனது கோஷ்டிக்குபெற்றுக்கொடுத்தார். விளையாட்டைப்பார்த்த ரசிகர்கள் போட்டி டாக்டர்களும், ஜிம்மி ராஜரத்தினத்திற்கும் தானோ என்று பேசக்கூடிய அளவிற்கு திரு. ஜிம்மி திறம்பட விளையாடினர்.

போட்டி நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா கலந்து கொண்டார். திருமதி ஸ்ரீஸ்கந்தராசா பரிசுகளை வழங்கினர். சிறந்த துடுப்பெடுத்தாடுபவர்களுக்கான பரிசை டாக்டர் கோஷ்டியில் திரு. மயில்வாகனமும், வழக்கறிஞர்கள் கோஷ்டியில் திரு. ஜிம்மி ராசரத்தினமும் பெற்றனர்.

---

## சிரமதான இயக்கம்

யாழ்ப்பாணம், புதன்

ஏப்ரல் மாதம் 17, 18, 19 20 திகதிகளில் தருமபுரம் அகதிகள் குடியேற்றப்பகுதியில் சிரமதான இரக்கத்தின் மூலம் ஆக்கவேலைகள் செய்யப்படவிருக்கிறது. இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று வருகிற சனிக்கிழமை தருமபுரம் சைவவித்தியாலயில் திரு. கே. நேசையா தலைமையில் நடைபெவிறருக்கிறது.

---

## இரு நீதிபதிகள்

மாவிட்டபுரம், செவ்வாய்

மல்லாகம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு நாளில் இரு நீதிபதிகள் வழக்குகளை நடத்திய சம்பவம் நேற்று நிகழ்ந்துள்ளது. திரு. எஸ். யோகநாதன் முன்பு விசாரிக்கப்பட்டு தான் ஒத்திவைத்த வழககை விசாரிக்க நேற்று மாஜிஸ்டிரேட் கோர்ட்டுககு வந்தார். திரு. வெஸ்லி. டி. தாமோதரம் ஏனைய வழக்கு விசாரணைகளை நடத்தினர்.

## விமானத்தபால் வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை விமானத்தபால் சேவையின் 25-ம் வருடத்தை நினைவு கூருமுகமாக இம்மாதம் 28-ம் திகதி விசேஷ 50 சத முத்திரை மெளியிடப்படப்படவிருக்கின்றது. இம் முத்திரை ஆகஸ்ட் 31-ம்திகதி வரை விற்பனைக்கிருக்கும். விசேஷ முத்திரை விற்பனையாகும் காலத்தில் தற்போது விற்பனை செய்யப்படும் 50 சத முத்திரை விற்பனைசெய்யப் படமாட்டாது.

---

## இந்தியாவில் ஈதுல்பிதர்

புதுடில்லி, பெப். 26

இந்தியா முழுதும் ஈதுல் பிதர் கொண்டாடப்பட்டது. டில்லி ஜும்மா மசூதியில் உபராஷ்டிரபதி ஸகிர் ஹுசெய்ன், ஐக்கிய அரபுக் குடியரசு போக்கு வரத்து மந்திரி மேற்காசியத் தூதர் ஆகியோர் உட்பட ஆயிரக்கணக்கானோர் தொழுகையில் கலந்துகொண்டனர்.

ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற தொழுகையில் பிரதமர் பக்ஷி குலாம் முகம்மதுவும், மற்றும் முஸ்லிம்களுடன் ஹிந்துக்களும், சீக்கியர்களும் கலந்துகொண்டனர்.

கல்கத்தாவில் 50,000 க்கு மேற்பட்ட முஸ்லிம்களின் தொழுகையில், முதன்மந்திரி டாக்டர் பி. ஸி. ஸென்னும் கலந்துகொண்டார்.

புதுடில்லியில் உபராஷ்டிரபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்ன் இல்லத்தில் ஹிந்துக்களும், சீக்கியர்களும் சென்று ஈதுல் வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.

---

## கியூபா விஷயத்தில் நிலையற்ற கொள்கை!

### செனட்டர்சீற்றம்

வாஷிங்டன், பெப். 26

கியூபா சம்பந்தமாக கென்னடி அரசாங்கம் நிலையற்ற, உறுதியற்ற கொள்கையைக் கொண்டிருக்கிறதென்று அமெரிக்க குடியரசுக் கட்சி அங்கத்தவர் செனட்டர் கிரீச் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கியூபா சம்பந்தமாக உறுதியான, நிலையான கொள்கை வேண்டும். இவைகள் கென்னடி அரசாங்கத்திடம் இல்லாத காரணத்தினல்தான், கியூபா விஷயத்தில் சோவியத் பிரவேசித்திருக்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

## மாதர்தையல் பாடசாலை

பருத்தித்துறை, செவ்வாய்

புலோலி மாதர் முன்னேற்றச்சங்க தையல்பாடசாலைத் திறப்புவிழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி 9-3-63 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திறந்து வைப்பார்.

விழாவிற்கு வடமராட்சி காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆணல்ட் தலைமைவகிப்பார்.

---

## விஞ்ஞான நூல்கள் அன்பளிப்பு

கொழும்பு, செவ்வாய்

இலங்கையிலுள்ள செக்கோஸ்லோவேகிய தூதராலயம், 60 விஞ்ஞானப் புத்தகங்களை வித்தியாலங்கார பல்கலைக்கழகத்துக்கு வழங்கியுள்ளது.

---

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் வைத்தியசாலை பணியாளன் கணபதிப்பிள்ளையின் தாயார் இளையதம்பி முத்துப்பிள்ளை காலமானர். ஈமக்கிரியைகள் 27-2-63 மாலை 3 மணியளவில் கந்தரோடையில் உள்ளசங்கப்புலவு மயானத்தில் நடைபெறும்.

காரியதர்சி,
யாழ். வைத்தியசாலை
சிக்கன சேமிப்புச் சங்கம்.

733

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 27-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.